www.padippakam.com

K £1.00 France 10FF Swiss 2.00SF Germany 2.50DM Canada $2.00

# ஈழகேசரி

செப்டெம்பர் 95

தமிழர்களைக் கொன்றொழிக்க அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் கொழும்பில் 'கொலைப்படை'



## வை.கோ. பிரத்தியேக பேட்டி

பிரபாகரன் தலைமையில் தமிழீழம் மலரும்



புத்தவிகாரைகளில்

# தமிழர்களை அழிக்க சிங்களவர்கள் யாகம்

படிப்பகம்

www.padippakam.com


திருமணம் மற்றும் விசேட
விருந்துபசார வைபவங்களா?

மணக்க மணக்க சுவைத்து உண்ண அருமையான யாழ்ப்பாண உணவு வகைகளையும், இலங்கை, தென்னிந்திய சாப்பாட்டு வகைகளையும் உடனுக்குடன் தயாரித்து வழங்கும் பல்சுவை உணவகம்

JAFFNA HOUSE

Sri lankan and South Indian Restaurant and Takeaway



90 High Street, Tooting Broadway,
London SW17



உங்களுக்குத் தேவையான சகல
உணவுகளையும் சுத்தமான முறையில்
சுவையுடன் பரிமாற காத்திருக்கிறார்கள்

Opening Hours: Monday-Sunday
12 Noon to Midnight
மேலதிக விபரங்களுக்கு:
0181-672 7786, 0181-767 6668.

www.padippakam.com





## தமிழர்களை அழிக்க யாகம் - 4

சந்திரிகா அரசியல் தீர்வுபற்றி கதைத்துக்கொண்டிருக்க தமிழர்களை அழிக்க சிங்களவர்கள் யாகம்



## மிதக்கும் சடலங்கள் - 8

கொழும்பில் கைதாகும் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் ஏரிகளில் மிதக்கும் 'மர்மம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.




## தமிழீழம் தான் தீர்வு - 17

புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் அதற்கு ஆதரவாக துணிந்து குரல் கொடுக்கிறார் வை கோ



## இதயம் இல்லாத தீர்வு - 23

தமிழர்களின் இதயபூமியான மணலாறு பறிபோன பின்னர் அங்கங்களால் என்ன பயன்



## வானிலும் யுத்தம் - 26

வடபகுதியில் பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் குண்டு வீச்சு நடத்தும் விமானங்கள்



## சாம்பலான வரலாறு - 33

சிங்கள இனவெறியின் கோரப் பசிக்கு சாம்பராகி வரலாற்றுப் பதிவினைப் பெற்ற யாழ்ப்பாண பொது நூலகம்

ஈழகேசரி

சர்வதேச செய்திச் சஞ்சிகை

EELAKESARI

38, Moffat Road,
London Sw17 7EZ
Tel: 0181/ 767 8004 Fax: 0181/ 767 7866

Editor:
**E.K.Rajagopal**
Editorial Adviser:
**S.S.Kuhanathan**
Administrative Advisers:
**Sivanadiyan Sripathy**
**S.Balachandran**
Assistant Editor:
**Ratnam Kandasamy**
Editorial Assistant:
**S.Skantharaja**
Legal Adviser:
***Raja Thavaraja, LLB***

**ஆண்டுச் சந்தா**

பிரிட்டன்: 15 ஸ்ரேலிங் பவுண்
ஐரோப்பா: 20 ஸ்ரேலிங் பவுண்
கனடா: 40 கனேடியன் டாலர்
அமெரிக்கா: 35 டாலர்கள்
ஏனைய நாடுகள்: 25 டாலர்கள்
சந்தாக்களை காசோலையாக அல்லது காசுக்கட்டளையாக EELAKESARIஎன்ற பெயருக்கு அனுப்பிவையுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## மக்கள் சஞ்சிகை

அட்டைப் படத்தின் அமைப்பு எடுத்த எடுப்பிலே எம்மை எல்லாம் ஈர்த்து விட்டது. பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டியபோது, சகல விடயங்களும் சகல விதமான வாசகர்களையும் கவரக்கூடியதாக பிரித்துள்ள முறை மிக மிகச் சிறப்பாக உள்ளது. எனது பார்வைக்கு 'இந்தியா ருடே' யையே மிஞ்சிவிட்டது என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது. அனைவருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் ஆக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. முன்னர் ஜெர்மனியின் எல்லாத் தமிழ்க்கடைகளிலும் 'ஈழகேசரி'யைப் பெறமுடியாதிருந்தது. பல கடைக்காரர்களுடன் பேசினேன். 'ஈழகேசரி' மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டுவிட்டது போன்று, பெருமிதமாகக் கதைத்தார்கள். 'ஈழகேசரி' வெற்றி முரசு கொட்டட்டும்.

**எஸ். பாக்கியநாதன் B. A**
கலைவிளக்கு,
டோட்முண்ட், ஜெர்மனி.

## எகிப்து சிறையிலிருந்து,,

ஓர் குகை போன்ற சிறிய அறைக்குள் 77 பேர் முடங்கி அடங்கி அடைக்கப்பட்டுள்ள நிலையில், 'ஈழகேசரி' புதிய சஞ்சிகை கிடைத்தது. மனதுக்கு ஆறுதலைத் தந்தது. என்னோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் சிலரும் நானும் மாறி மாறிப் படித்தோம். ஈழத்துக்காக நடாத்தப்படும் இந்த இதழ் தரத்தில் உயர்ந்து நிற்கிறது. ஈழம் மலரட்டும். அன்பும் நட்பும் தொடரட்டும்.

**வி. கனகசபாபதிப்பிள்ளை**
KANATHER PRISON , எகிப்து.

## துரோகம் அம்பலம்

புதைகுழியிலிருந்து உயிர்த்து, இந்தியாவின் வலையில் வீழ்ந்துள்ள எட்டப்பர் கூட்டத்தை 'தொடரும் துரோகம்' கட்டுரை மூலம் திருவரங்கன் அம்பலப்படுத்தியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியை கலைத்து விட வேண்டும் என்ற அவரது யோசனை மிக வரவேற்கத்தக்கது.

**இ. சுப்பிரமணியம்**
சூரிச், சுவிஸ்




## பிரார்த்தனைக்கு ஒரு நேரம்

உங்கள் 'ஈழகேசரி' நல்ல முறையில் தமிழ் ஈழத்துக்காக குரல் கொடுத்து எழுதுவதைப் படித்து சந்தோஷம் அடைகிறேன். இப்போது ஈழத்திலுள்ள மக்கள் பல வழிகளிலும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். நமது மக்கள் தமது கஷ்டங்கள் நீங்கி நலமுடன் இருக்கவும், தமிழருக்கு வெற்றி கிடைக்கவும் எல்லாத் தமிழரும் ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அந்த நேரத்தில் பிரார்த்தனை செய்யுமாறு ஒரு வேண்டுகோளை விடுத்து, அதனை வழிநடாத்த 'ஈழகேசரி' முன் வரவேண்டும்.

**திருமதி ராஜம் விவேகானந்தன்**
**(ஆழிக்குமரன் அன்னை)**
**ரொறன்ரோ, கனடா**

## குறை நீங்கியது

உலகமெல்லாம் சிதறி வாழும் ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு சர்வதேச சஞ்சிகை இல்லை என்ற குறையை நீங்கள் போக்கிவிட்டீர்கள். லண்டனிலிருந்து தான் வெளி வருகிறதா என்று இங்குள்ள நண்பர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தமிழில் படிக்க எமக்கு இங்கு ஒன்றுமே இல்லை என்ற குறை நீங்கி விட்டது.

**என் . பாலதரன்**
கம்பாலா, உகண்டா.

## சாக்கடை அரசியல்

ஈழகேசரி கண்டேன்; சுவைத்தேன்; களிப்புற்றேன். தரமாக இருந்தது. தரமான ஆக்கங்கள். அத்தனையையும் படிக்கலாம். இந்திய அரசியல் செய்திகளைக் குறைத்துக்கொள்ளவும். சாக்கடை அரசியல் எமக்கு வேண்டாம். புலிகளின் சுவிஸ் பொறுப்பாளர் பற்றி நீங்கள் எழுதியிருப்பது நூறு வீதம் சரி. நமது மக்களை விழிப்படையச் செய்த வீரர். புலம் பெயர்ந்து வாழும் எங்களுக்கு காத்திரமான சஞ்சிகையொன்றைத் தந்து கொண்டிருக்கும் உங்களுக்கு நன்றி.

**வி. எம். நவீனன்,**
கிறென்சென், சுவிஸ்

## பிரபா மீது நம்பிக்கை

தமிழகம் மாறினாலும், மாறாவிட்டாலும் எங்களுக்கு ஒன்று தான். நாம் நமது காலில் தொடர்ந்து நிற்கவேண்டுமம். எத்தனை சாவுகள் வந்தாலும் தமிழீழத்தை வென்றெடுத்தே தீரவேண்டும். பிரபாகரன் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**கலா ரங்கநாதன்,**
ரொறன்ரோ, கனடா,

## பழனிவேல் கட்டுரைகள்

டாக்டர் டேவிட் பழனிவேல் எழுதிவரும் கட்டுரைகள் நமது மனச் சிக்கல்களை தீர்த்துக் கொள்ள உதவுகிறது. சில காலமாக எனக்கு இருக்கிற பிரச்னைகள் பற்றி குழம்பிப் போய் இருந்தேன்., அவரது கட்டுரைகளைப் படித்த பிறகு தான் எல்லாமே விளங்குகிறது. மன விகாரங்களை வெகு லாவகமாக எடுத்து விளக்குகிறார். அவர் பெரும் சேவை ஒன்றைச் செய்கிறார். தொடர்ந்து நமக்குள் உள்ள பிரச்னைகளை தன் எழுத்தின் மூலம் தீர்க்க வேண்டுகிறேன்.

**கு. சுந்தரமூர்த்தி**
நோர்வே



படிப்பகம்

www.padippakam.com



# தீர்வு என்ற பெயரில் சதி

சந்திரிகா அரசு முன் வைத்துள்ள யோசனைகள், இனப்பிரச்னைக்குத் தீர்வுத்திட்டமா? அல்லது தமிழர்களின் பாரம்பரிய பூமியான வடக்கு -கிழக்கு தாயகம் என்ற கோட்பாட்டை உடைத்து, எறிந்து குழி தோண்டிப் புதைக்கும் சதித்திட்டமா? பறிபோன தாயக மண்ணை மீட்டெடுக்கத் தியாகவேள்வி நடந்து கொண்டிருக்கிற போது, எல்லைகளைத் 'தோண்டி' எடுத்துத் தமிழினத்துக்கு மரணக் குழி தோண்டும் 'செப்படி வித்தை' தான் சந்திரிகாவின் தீர்வுத்திட்ட யோசனைகள்.

சொகுசான அரசியல் நடாத்திப் பழக்கப்பட்டுப் போன தமிழர் கூட்டணித் துரோகக் கும்பல், அரசின் இந்தத் தீர்வுத் திட்டத்துக்கு 'துதி' பாடி, வாழ்த்துக் கூறி வரவேற்றிருக்கிறது.

வாழ்வா? சாவா? என்று தமிழினம் உயிரோடு போராடிக்கொண்டிருக்க, தமிழர் விடுதலைக் கூட்டணி முண்டியடித்துக்கொண்டு, "இது போன்ற திட்டத்தை இதுவரை தமிழர்கள் கண்டதேயில்லை" என்று ஆரவாரம் செய்து கூத்தாடுகிறது. புளொட்டும், ஈ. பி. டி. பி. யும் சந்திரிகாவை நோக வைத்து விடக்கூடாது என்ற எண்ணத்துடனோ, என்னவோ இன்னும் சில திருத்தங்கள் செய்தால் திட்டம் நல்லாக இருக்கும் என்று மிகப் பக்குவமாக கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களை அங்கீகரிக்காமல், அரசியல் பரவலாக்கல் என்ற 'கதை'யை விட்டு, தாயகத்துக்கு 'வேட்டு' வைக்கும் எந்த விதமான தந்திரத் திட்டங்களுக்கும் பலியாகிப் போவதற்கு இன்னும் தமிழர்கள் என்ன ஏமாளிகளா?




சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில், ஜே. ஆர். என்றும், பிரேமதாசா என்றும் ஸ்ரீமா என்றும் சந்திரிகா என்றும் மாறி மாறி பதவிக்கு வந்தார்களேயொழிய தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களில் எந்தவித மான மாற்றமும் இருக்கவில்லை.

நாற்பத்தி எட்டாம் ஆண்டு முதல் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் அபகரிக்கப்பட்ட பூமிகளை இழந்தோம். 'இணைப்பு' என்ற பெயரில் இப்போது வந்துள்ள சந்திரிகாவின் திட்டம், தமிழர்களின் முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை போன்ற பிரதேசங்களையே இழக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்னைக்குத் தீர்வு கண்டு விட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் தீர்வுத் திட்டம் முன் வைக்கப்படவில்லை என்பது வெட்ட வெளிச்சம்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் முழுமையான தாயகம் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாத எந்த யோசனைகளும், சமரசங்களும் எந்தவித பலனையும் அளிக்கப் போவதில்லை.

இத்தனை ஆண்டுகளாக, எத்தனையோ அழிவுகளைத் தாங்கிக் கொண்டு இரத்தத்தாலும் கண்ணீராலும் அத்தியாயம் அத்தியாயமாக எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழீழக் காவியத்தில், போர் உணர்வை, தியாகப் பண்பை, விடுதலை வேள்வியை தமிழர்கள் தாரைவார்த்துக் கொடுக்க இனியும் தயாராக இல்லை.

சந்திரிகா முன் வைத்துள்ள தீர்வுத்திட்டத்தில் தமிழரின் முக்கிய கோரிக்கைகள் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன என்பதை நம்மில் சிலரே உணரவில்லை. எப்படி வெளிநாட்டு அரசுகள் புரிந்து கொள்ளும்?

உலகத்தை ஏமாற்றுவதற்காக நாடகம் ஆடுகிற தீர்வுத்திட்டங்களை தமிழர்களால் இனி ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழரின் நியாயமான உரிமைகளை கிஞ்சித்தளவும் மதிக்காத, ஏற்காத, இந்தத் தீர்வுத் திட்ட யோசனைனகளை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்திருப்பது நியாயமானதே.

தமிழர்களின் தாயகத்தை முழுமையாக மீட்டெடுக்க உயிரைத் துச்சமென மதித்து களத்தில் போராடிக் கொண்டிருக்கும் ஒரே அமைப்பான விடுதலைப் புலிகளின் இணக்கம் இல்லாத தீர்வுத்திட்டத்தை சிவசிதம்பரமும், மற்றும் சிலரும் ஆதரித்து என்ன? நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து என்ன? சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி என்ன?

தமிழ் மக்களை ஏமாற்றி, அவர்களைப் புலிகளிடமிருந்து பிரிக்கும் நரித்தந்திரத்தை சந்திரிகா செய்கிறார்.


புலிகள் வேறு; ஈழத்தமிழ் மக்கள் வேறு அல்லர். சந்திரிகா இந்த உண்மையை விரைவில் முற்றும் முழுதாக உணரத்தான் போகிறார். ■



படிப்பகம்

www.padippakam.com





தமிழர்களின்

# அழிவுக்கு யாகம்

□ சத்யன்

ஜோஸ்யத்தின் மீது ஒருவருக்குத் திடீர் ஆர்வம் பிறக்கிறதென்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால், முக்கியமாக தம்மீதே நம்பிக்கையற்றுப் போகும் நிலையில் தான் ஜோஸ்யத்தின் மீது நம்பிக்கை பிறக்கின்றது. அதே நிலைமை தான் சிங்கள இனவாதிகளுக்கும் இன்று ஏற்பட்டுள்ளது.

சிங்கள இனவாதத்தின் 'காவலர்களாகவு'ள்ள பத்திரிகைகள் கூட ஜோஸ்யத்தை அடிப்படையாக வைத்தே தம்முடைய அரசியல், இராணுவக் கட்டுரைகள் ஆய்வுகளை எழுதி வருகின்றன. இதனை விட ஜோஸியத்துக்கென்றே பல சிறிய பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவையும் யுத்தம் தொடர்பான தமது எதிர்வு கூறல்களையே வெளியிட்டு வருகின்றன.

இனவாதத்தை முன்னிலைப்படுத்தும் 'லக்பீம' என்ற பத்திரிகை ஜோஸியத்தை அடிப்படையாகக் கொண்டு


**சந்திரிகா அரசியல் தீர்வுபற்றி கதைத்துக்கொண்டிருக்க தமிழர்களை அழிக்க சிங்களவர்கள் யாகம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்**



படிப்பகம்

www.padippakam.com





பிக்கை ஜோஸ்யத்தின் மீது பிறந்துள்ள இந்த நாட்டத்தின் அடுத்த கட்டமாக யாகங்களை நடத்துவதிலும் பேரினவாதிகளும், தீவிர பௌத்த அமைப்புக்களும் அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளன. 'இரஹந்த' பத்திரிகையின் ஆதரவுடன் சீனிகம விகாரையில் அண்மையில் பெரிய யாகம் ஒன்று நடைபெற்றது. எதற்காக இந்த யாகம் நடைபெற்றது? சிங்களப் படைகள் யுத்தத்தில் வெல்லவேண்டும் என்பதற்காக இந்த யாகத்தை நடத்தியிருந்தால் பரவாயில்லை என்று சொல்லலாம். ஆனால், இந்த யாகம் அதற்காக நடத்தப்படவில்லை. பிரபாகரன் மரணமடையவேண்டும் என்ற நோக்கத்துடனயே இந்த யாகம் நடத்தப்பட்டது.

மிளகு அரைத்து, தேங்காய் அடித்து விஷ்ணுவுக்கு பூஜை செய்து பௌத்தர்கள் எல்லோரும் அன்று 'வஞ்கவி' சொல்லும்படி கேட்கப்பட்டனர். இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து விகாரைகளிலும் இது இடம் பெற்றதாகவும் தெரிய வருகின்றது.

**சிங்களப் படைகள் போரில் வெல்லவேண்டும் என்பதற்காக இந்த யாகம் நடத்தப்படவில்லை தமிழர்களின் தேசியத் தலைவருக்கு மரணம் ஏற்படவேண்டும் என்பதற்காக நடக்கிறது**

இதே போன்ற பல்வேறு யாகங்களும் வேள்விகளும் தென்னிலங்கையிலுள்ள பல விகாரைகளில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. தென்னிலங்கையின் பிரபலமான விகாரை ஒன்றில் மிகுந்த சனக்கூட்டத்தின் மத்தியில் வேள்வி ஒன்று இடம் பெற்றது.



முழுப்பக்க அரசியல் கட்டுரை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது. ஜூனுக்குப் பின்னர் புலிகளுக்குக் கூடாத காலம் என அவர் அக்கட்டுரையில் விளக்கியிருக்கின்றார். 'இரகந்த' என்ற ஜோஸ்ய பத்திரிகை ஜூன் முதல் டிசம்பர் வரை பிரபாகரனுக்குக் கூடாத காலம் என எழுதியுள்ளது. இக்காலம் முழுவதுமே அவருக்கு கெடுதல் காலமெனவும் குறிப்பாக டிசம்பர் 7 ஆம் திகதி அவருக்கு ஆபத்தான நாள் எனவும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

அரசியல் இராணுவ ரீதியில் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தது. இவ்வாறான முயற்சிகள் இனிமேலும் வெற்றியளிக்காது என்பது சிங்கள மக்களுக்கும் தெரிந்தே உள்ளது. அதனால் அவர்களை உற்சாகப்படுத்தக் கூடிய ஒரு விடயம் மட்டுமே இப்போது மிகுதியாக இருந்தது. அதுதான் ஜோஸ்யம். ஜோஸ்யத்தின்படி அரச படைகளுக்கு நல்ல காலம் எனக் காட்டி மட்டுமே சிங்களவர்களை உற்சாகப்படுத்த முடியும் என்பதாலேயே இனவாதிகளுக்கு இப்போது ஜோஸ்யத்தின் மீது திடீர் பற்றுதல் ஏற்பட்டுள்ளது.

**யாகத்தின் மீதும் நம்**



படிப்பகம்

www.padippakam.com


நம்பிக்கைக்கு லண்டனில் ஒரு தங்க மாளிகை

**RAJU PATTNI &SON**

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஓரே மாளிகை

*SPECIALISE IN 22Ct. GOLD & DIAMOND JEWELLARY*

**TAX FREE FOR OVERSEAS VISITORS**

*தமிழ் மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று*
நகை வியாபாரத்தில்முன்னணி வகிக்கும் ஓரே நிறுவனம்




அழகான வண்ண வண்ண
உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான
தாலிக் கொடிகள் நெக்கலஸ்,
*விதம் விதமான நெக்லஸ்*
'ஓம்' பதிக்கப்பட்ட பென்ரன்கள்



தங்க வளையல்கள்
அட்டியல், சங்கிலிகள்
நகைகளின் சுரங்கம்
தங்க நகைகளின்
தரமான தெரிவு

**ராஜு பட்னி அன் சன்**

**PATTNI HOUSE, 58-60 EALING ROAD**
**WEMBLEY, MIDDX HA0 4TQ**
TEL : 081 903 6677/2859, 081 902 0577 FAX: 081 903 4887




படிப்பகம்

www.padippakam.com



இதில் பிரபாகரனின் படம் ஆணிகளால் அடிக்கப்பட்டு கொதிக்கும் எண்ணெயில் போட்டுக் காய்ச்சப்பட்டது. ஏ.எப்.பி. நிருபர் கூட இச் சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளார். இந்த யாகம் செய்யும் 'புதிய கலாச்சாரம்' ஒரு தொற்றுநோய் போலப் பரவி வருகின்றது. பிக்குமாரே இவ்வாறான சம்பவங்களில் முன் நின்று உழைக்கின்றார்கள். அவ்வப்பகுதி அரசியல்வாதிகளும் இவற்றுக்கு ஆதரவு வழங்குகின்ற போதிலும் கூட அவர்கள் எவருமே இவற்றில் நேரடியாகக் கலந்து கொண்டதாக இதுவரை செய்திகள் எதுவும் வெளிவரவில்லை.

இவர்களிடமிருந்தா தமிழ் மக்கள் நியாயமான தீர்வொன்றை எதிர்பார்க்கின்றார்கள்? சிங்கள மக்களின் மனப்போக்கில் மாற்றமேற்பட்டுள்ளதெனக் கூட்டணித் தலைவர்கள் கூறுவது இதனையா?

**இது தான் பௌத்த போதனை**

ஈழப்போர் தொடர்பான கலந்துரையாடலொன்று தனியார் தொலைக்காட்சிச் சேவையொன்றில் அண்மையில் இடம் பெற்றது. இதில் கருத்து வெளியிட்ட மடிஹேன பஞ்சாசீஹ தேரர் 'யுத்தம் குறித்துப் பேசுவது பிக்குமார்களுக்கு உகந்த செயலல்ல.' எனக் கூறினார். ஆனால், இதே தொலைக்காட்சிச் சேவையில் மற்றொரு நாள் இடம் பெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட மற்றொரு பிக்கு தெரிவித்த கருத்துக்கள் அதனைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

துன்னானே பஞ்சாமூர்த்தி என்ற இத்தேரர், வடக்கில் இப்போது நடப்பது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் என வர்ணித்தார். அதாவது தமிழர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இடம் பெறும் யுத்தமே இது என்பது அவருடைய கருத்தாக இருந்தது. புலிகளையும் தமிழர்களையும் பிரிக்க முடியாது. தமிழர்கள் எல்லோரும் புலிகளே. யுத்தத்தின் மூலமாக அவர்களை அழிக்க வேண்டும். இதுவே அரசியல் தீர்வு. தொலைக்காட்சியில் இக்கருத்துக்களை தேரர் முன் வைத்த போது பேரினவாதிகளுக்கு அது மகிழ்ச்சியளிப்பதாகவே இருந்திருக்கும். 'நாட்டையும் இனத்தையும், மதத்தையும் நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நாடு மற்றும் இனம் தொடர்பான பிரச்னையை நாம் முதலில் ஒரு பக்கத்தில் வைப்போம். இவை எல்லாவற்றையும் விட பௌத்த மதத்தைக் காப்பாற்றிக் கொள்வதே பௌத்தர்களின் புண்ணியக் கருமமாகும்' எனவும் இத் தொலைக் காட்சி உரையாடலில் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார் அத் தேரர்.

யாரிடமிருந்து மதத்தைக் காப்பாற்ற இவர் புறப்பட்டுள்ளார்?

புலிகளிடமிருந்தும் தமிழர்களிடமிருந்தும் தான் என்பதே அவர்களது பதிலாக இருக்க முடியும். ஆனால் புலிகளோ தமிழர்களோ தமது உரிமைகளுக்காகத் தான் போராடுகின்றார்கள். இதனை ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாக, தமது இனத்துக்கு எதிரான யுத்தமாக அவர்கள் கருதினால், இந்த யுத்தம் தொடர்வதை அவர்களால் தவிர்க்கமுடியாமலேயே இருக்கும்.

**சிங்கமாக மாறிய புலி**

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை நடத்துவதற்கான அமைதியை அரசாங்கம் வழங்கிய பின்னர் பல தனியார் தொலைக்காட்சிச் சேவைகள் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளன. நிகழ்ச்சிகளையும் போட்டி போட்டுக்கொண்டு ஒலிபரப்பி வருகின்றன. நிகழ்ச்சிகள் அனைத்தும் சிங்களவர்களை இலக்காகக் கொண்டே ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. அதாவது தமிழ்த்திரைப் படங்கள் கூட சிங்களவர்களை நோக்கமாகக் கொண்டவையாகவே உள்ளன. இதனால், படங்களில் பேசப்படும் வசனங்கள் அனைத்தும் சிங்களத்தில் உபதலைப்புக்களாகக் காட்டப்படுகின்றன. அண்மையில் 'சீவலப்பேரி பாண்டி' என்ற தமிழ்ப் படம் ஐ.ரி.என். தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

**சிங்களவர் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது கேள்விக்குரியது**

'யுத்தம் குறித்துப் பேசுவது பிக்குமார்களுக்கு உகந்த செயலல்ல என்று தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் பஞ்சாசீஹதேரர் கருத்துவெளியிட்டார் ஆனால் அதே தொலைக்காட்சியில் வடக்கில் நடப்பது ஆக்கிரமிப்பு யுத்தம் என்றும் தமிழர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக யுத்தம் நடப்பதாகவும் மற்றுமொரு பிக்கு கூறினார்.

வழக்கம் போல வசனங்கள் அனைத்துக்கும் உபதலைப்புக்கள் சிங்களத்தில் காட்டப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் கதாநாயகன் கைது செய்யப்படுகின்றார். அப்போது 'வீரத்தில் நீயொரு புலியடா' என்று அவரை மற்றொருவர் போற்றுகின்றார். உண்மையில் சிங்கள உபதலைப்பும் அவ்வாறே இடம் பெற்றிருக்கவேண்டும். ஆனால், அதனை அவ்வாறே விட்டு விட இனவாதம் இடம் கொடுக்கவில்லை. அதனால் அந்த வசனம் சிங்களத்தில் 'வீரத்தில் நீயொரு சிங்கமடா' என மொழி மாற்றம் செய்யப்பட்டது. மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்புச் செய்யும் போது உதாரணத்துக்காகக் கூறப்படும் சொற்களைக் கூட மாற்றம் செய்யவேண்டியவர்களாகவுள்ளனர். இது ஒரு உதாரணம் மட்டும் தான். இது போன்ற வேறு பல சம்பவங்களும் இடம் பெறுகின்றன. ■

புலி என்ற சொல் கூட தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகக் கூடாது என்பதில் தொலைக்காட்சி நிலையங்கள் மிகக் கவனமாக இருக்கின்றன.

'வீரத்தில் நீ ஒரு புலியடா'என்ற வாசனத்தை மொழிபெயர்த்தபோது- 'வீரத்தில் நீ ஒரு சிங்கமடா'என்று மாற்றினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# மிதக்கும் தமிழர் சடலங்கள்



கொழும்பில் 'கைது' செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவது அதிகரித்துச் செல்லும் அதேவேளையில், ஏரிகளில் இனந்தெரியாத சடலங்கள் மிதந்து வருவதும் அதிகரித்துள்ளது. அச்சமூட்டும் வகையில் இச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற போதிலும், 'உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது' என்ற வாக்குறுதியுடன் அரசின் நடவடிக்கை முடிவடைந்துவிடுகின்றது. மர்மக் கைதுகள், காணாமல் போதல்கள், மர்மச் சடலங்கள் தொடர்பாக தமிழர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்விடயத்தில் அரசின் அசட்டைப் போக்கு இந்தச் சந்தேகங்களை உறுதி செய்வதாகவே உள்ளது என தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் சுமார் முப்பது சடலங்களைப் பொலிசார்ர் கண்டெடுத்துள்ளார்கள். கொழும்பில் புறநகர்ப் பகுதிகளிலும், குருநாகல் மாவட்டத்திலும் ஏரிகளில் போடப்பட்டிருந்த இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டன. சுமார் 25 -40 வயதுக்குட்பட்ட இச்சடலங்களில் இரண்டு பெண்களுடையது என்பது கணிக்கத்தக்கது. மூன்று மாத காலப்பகுதியில் கச்சிதமாகச் சொல்லப்பட்டு, கவனமாகக் கொண்டு வரப்பட்டு ஏரிகளில் போடப்பட்டிருந்த இச்சடலங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதும், மர்மச் சடலங்கள் மிதந்து வருவதும் ஜே. வி. பி. கால நடவடிக்கைகளையே நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. 1989 -90 காலப் பகுதியில் ஜே. வி. பி. யை ஒழிப்பதற்காக ஜனாதிபதி பிரேமதாச கடுமையான நடைமுறைகளைக் கடைப்பிடித்தார். பெருந்தொகையான சிங்கள இளைஞர்கள் காணாமல் போனார்கள். டசின் கணக்கில் சடலங்கள் தினசரி ஏரிகளிலும் ஆறுகளிலும் மிதந்து வந்தன. இப்போதும் அதே போன்ற ஒரு பின்னணியிலேயே இச்சம்பவங்கள் இடம் பெறுவதாகத் தெரிகிறது.

**யாருடைய சடலங்கள்?**

முப்பது சடலங்களில் நான்கு சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று 'வீடியோ' கடமையாற்றும் ஒருவருடையது என அவருக்கு நெருக்கமான உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இந்த நான்கு சடலங்களுமே தமிழர்களுடையவை என்பது அதிர்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது ஏனைய சடலங்களும் தமிழர்களுடையதாக இருக்கலாம் என்பதே அந்த ஊகம்.

அடையாளம் காணப்பட்டுள்ள நான்கு பேரும் மர்மமான முறையில்

**அரச அங்கீகாரத்துடனேயே "கொலைப் படை"யொன்று இயங்குகின்றது என தமிழர்கள் எண்ண நியாயமான காரணங்கள் உள்ளன.**



படிப்பகம்

www.padippakam.com





காணாமல் போனவர்கள் எனத் தெரிய வருகிறது. உடல் மிகவும் மோசமான முறைகளில் சிதைவுற்றிருந்த போதிலும் உறவினர்ளால் அவை அடையாளம் காணப்பட முடியாதவாறு முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏரிகளில் மீன்களால் கடிக்கப்பட்டும் சடலங்கள் மிகவும் மோசமான முறையில் சேதமடைந்திருந்தன.

இவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னரே ஏரிகளில் கொண்டு வந்து போடப்பட்டிருக்க வேண்டும் என பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன. இளைஞர்கள் பட்டினி போடப்பட்டும், தாக்கப்பட்டும், நீரில் அமிழ்த்தப்பட்டும் கொல்லப்பட்டிருக்கலாம் என பிரேத பரிசோதனை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவர்களில் எவருமே சுட்டுக் கொல்லப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. சுடப்பட்டால் வெளியே சத்தம் கேட்கும் என்பதால் அது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

**பொலிஸ் விசாரணை**

கொழும்பின் தென் பகுதியிலுள்ள பாணந்துறையிலேயே முதலில் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இங்குள்ள பொல்கொட ஏரியில் சடலங்

கடத்தப்பட்டு பின் தப்பிய தமிழ் மாணவனிடமிருந்து பலவித தகவல்கள் கிடைக்கப்பட்ட பின்னரும் பொலிஸ் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையல்ல
நாங்க மட்டும் உலகத்திலே நாடு திரும்ப முடியல்ல

பெத்தவங்க ஊரினிலே ஏங்கிறாங்க பாசத்திலே
எத்தனை நாள் காத்திருப்போம் அடுத்தவன் தேசத்திலே


# RAJA & CO
## SOLICITORS

**Administrators of Oaths**

**Raja Thavaraja LL.B**

**295 Balham High Road**
**Tooting Bec**
**London SW17 7BA**

**Tel: 081 682 2585 Fax: 081 682 2575**


படிப்பகம்

www.padippakam.com



கள் மிதந்து வருவது தொடர்பாக மீனவர்கள் கொடுத்த தகவல்களை யடுத்து பொலிசார் அவற்றைக் கைப்பற்றினார்கள். மூன்று தடவைகளில் சுமார் 15 சடலங்கள் இந்த ஏரியிலிருந்து மீட்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஏழு சடலங்கள் குருநாகல் மாவட்டத்திலுள்ள அனலை ஏரியில் காணப்பட்டன. இவற்றில் இரண்டு பெண்களுடையவை. இவ் இரு பெண்களும் அடித்துக் கொல்லப்பட்டதாக பிரதே பரிசோதகைன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

> வாவியில் கிடக்கும் சடலங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் விசாரணை தொடங்கிய இடத்திலிருந்து சற்றும் நகரவில்லை.

இவற்றை விட மோதரை, மட்டக்குளி கடற்கரைப் பகுதிகளில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இறுதியாக ஜெயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டத்தையடுத்துள்ள தியவன்ன ஓயா ஏரியில் ஐந்து சடலங்கள் ஆகஸ்ட் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. முதலில் இரண்டு சடலங்களும் பின்னர் மூன்று சடலங்களும் இப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டன. மேலும் பல சடலங்கள் மீட்கப்படாமல் ஏரிகளில் அடித்துச் செல்லப்பட்டு கடலில் கலந்திருக்கலாம் என கொழும்பிலுள்ள தமிழ்ப் பிரமுகர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது அது தொடர்பான தீவிர விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சடலங்களை அடையாளம் காண முடியவில்லை. அதனால் விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை என பைலை மூடிவிடவே உள்ளூர் பொலிஸ் விரும்பியது. ஆனால், மனித உரிமை அமைப்புக்கள் சில குரல் கொடுத்ததையடுத்து இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக விசேட பொலிஸ் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்தார். இக்குழு நியமிக்கப்பட்டு இப்போது இரண்டு மாதமாகிவிட்டது. ஆனால், விசாரணை தொடங்கிய இடத்திலிருந்து சற்றும் நகரவில்லை. ஆனால், சடலங்கள் பெருகுகின்றன.

**பிரிட்டிஷ் நிபுணர் உதவி**

விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படாமைக்குப் பல காரணங்கள் பொலிசாரல் முன் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. முக்கியமாக சடலங்களை அடையாளம் காணமுடியாத நிலையில் விசாரணைகளை எவ்வாறு மேற்கொள்வதெனப் பொலிசார் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இந்தச் சடலங்களின் புகைப் படங்கள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டது. ஆனால் எந்த வகையிலும் அடையாளம் காண முடியாதவாறு முகம் சிதைக்கப்பட்டுள்ளதால், சடலங்களை அடையாளம் காட்ட எவரும் வரவில்லை. இதனைத் தொடர்ந்து சடலங்களை அடையாளம் காண்பதறகு பிரித்தானிய நிபுணர் ஒருவருடைய உதவியை அரசு நாடியது. உடற்கூற்றியல் நிபுணரான இவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டார். சடலங்களைப் பார்வையிட்ட அவர், தன்னுடைய நிபுணத்துவத்தால் அவற்றை அடையாளம் காண உதவுவதாக உறுதியளித்துள்ளார். இதற்காக 19 சடலங்களின் மண்டை ஓடுகள் அவரால் லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. மண்டை ஓடுகளின் வடிவத்தைக் கம்பியூட்டரில் செலுத்த, அதிலிருந்த அதற்குரியவரின் முக அமைப்பைப் பெற்றுக்கொள்வதே அவரின் திட்டம். இதற்குத் தேவையான பரிசோதனை லண்டனிலேயே உள்ளதாலேயே மண்டை ஓடுகள் லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அதே வேளையில் இவற்றை ஒப்பிட்டு அடையாளம் காண்பதற்கு வசதியாக கடந்த காலங்களில் காணாமல் போனவர்களின் புகைப் படங்களையும் பொலிஸ் திணைக்களம் கோரியுள்ளது. பிரித்தானிய நிபுணரின் நிபுணத்துவம் சிறப்பான முறையில் செயற்பட்டால், சடலங்களுக்குரியவர்கள் அனைவரையும் அடையாளம் காணமுடியும். ஆனால், கொலைப்பின்னணியை அறிவதற்கு இது எந்தளவுக்கு உதவும் என்பது தெரியவில்லை.

> சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு சிதைக்கப்படுவதால் பிரிட்டிஷ் நிபுணரின் உதவி நாடப்பட்டுள்ளது. அவரது உதவி வெற்றியளிக்குமா என்பது தெரியவில்லை.

**யாருடைய கொலைப் படை**

தொடர்ச்சியாக இவ்வளவு சம்பவங்கள் இடம்பெற்ற பின்னரும் பொலிஸ் விசாரணைகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படாதது, சாதாரண பொதுமக்கள் உட்பட சகலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இது ஒன்றில் ஆயுதப் படையினரது வேலையாக இருக்க வேண்டும்; அல்லது படையினரது ஆதரவில் இயங்கும் ஒரு குழுவினரது வேலையாக இருக்க வேண்டும்' என கொழும்பிலுள்ள தமிழ்ச்சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டார்.

> ஆயுதப் படையினரது வேலையாக இருக்கவேண்டும் அல்லது படையினரின் ஆதரவுடன் இயங்கும் தமிழ்க் குழுவினரது வேலையாக இருக்கவேண்டும்.

அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கத் தான் செய்கின்றது. ஏனென்றால் , தனிப்பட்ட முறையில் எவராலும் இவ்வளவு கொலைகளைச் செய்திருக்க முடியாது. கொழும்பில் வீதிக்கு வீதி போடப்பட்டுள்ள பொலிசாரினதும் முப்படைகளினதும் சோதனைச் சாவடிகளைத் தாண்டி சாதாரண பிரஜைகள் எவராலும் இவ்வளவு சடலங்களைக் கொண்டு சென்றிருக்க



படிப்பகம்

www.padippakam.com

> திட்டமிட்ட முறையில் அரச அங்கீகாரத்துடனேயே இக் கொலைப் படை இயங்குகிறது.

முடியாது. அத்துடன் அவ்வாறு இருந்தால் பொலிசாரால் அது இதுவரையில் பிடிபட்டிருக்கும். அத்துடன் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் பாராளுமன்றப் பகுதியில் காணப்பட்டன. பாராளுமன்றப் பகுதிக்கு சாதாரணமாக எவருமே செல்லமுடியாது. இப்பகுதியிலும் சடலங்கள் காணப்பட்டது அதிர்ச்சியானதாகவும் இதன் பின்னணி தொடர்பாகச் சந்தேகிக்கப்படவேண்டியதாகவும் உள்ளது.

அண்மையில் வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்ட தமிழ் மாணவன் ஒருவன் அவர்களிடமிருந்து தப்பியிருக்கின்றான். அவர் தடுத்து வைக்கப்பட்ட இடத்தில் மேலும் பல இளைஞர்கள் மொட்டை அடிக்கப்பட்டு உணவு எதுவும் வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தப்பி வந்த பின்னர் இது தொடர்பான தகவல்களை அந்த மாணவன் தெரிவித்துள்ளான்.

ஆனால், அதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதில் பொலிசார் அக்கறை காட்டவில்லை.

ஆனால், திட்டமிட்ட முறையில், அரச அங்கீகாரத்துடனேயே இக் கொலைப்படை இயங்குகிறது என தமிழர்கள் எண்ண நியாயமான காரணங்கள் உள்ளன. ●

# ‘தள்ளாடும்’ அரசு

பொ. ஜ. மு. அரசு பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியடைந்து விட்டது. ஒரு வருட காலத்துக்குள் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதனையுமே நிறைவேற்றாத அரசு என்ற பெயர் இவ் அரசுக்கு மட்டுமே சாரும். இது ஒரு புறம் இருக்க கட்சியில் உட்பூசல்கள் தினசரி வேகமாக மோசமடைந்து வருகின்றது. பொ. ஜ. மு. அரசில் இடம் பெற்றுள்ள கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தமது கோரிக்கைகளை முன் வைத்து நெருக்கடி கொடுக்கத் தொடங்கியுள்ளன.

சிறிமணி அத்துலத் முதலியும், லங்கா சமசமாஜக் கட்சியின் ஒரு பிரிவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு தெளிவான காலக்கெடு ஒன்று விதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. மறுபுறத்தில் ஸ்ரீ. ல. சு. க. வின் பின்வரிசை உறுப்பினர்கள் தமது தொகுதிகளில் இடம்பெறும் அபிவிருத்திகளைப் பொறுத்தவரையில் அமைச்சர்களின் ஆதரவு கிடைப்பதில்லை என குற்றஞ்சாட்டுகின்றார்கள். தற்போது அரசால் முன் வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் உள் வீட்டிலேயே பல பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது. புலிகளை ஓரங்கட்டுவதற்காக ஜனாபதியால் இத் திட்டம் முன் வைக்கப்பட்டது. இப்போது சிங்களவர்களிடமிருந்து தன்னை ஓரங்கட்டி வரும் ஒரு திட்டமாக இது அமைந்துவிடும் என அவர் அஞ்சுமளவிற்கு பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி, பட்டி வீரக்கோன், வாசுதேவ நாணயக்கார தலைமையில் ல. ச. ச. ச. ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள போராட்டம் ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு



> அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதனையுமே நிறைவேற்றாத நிலையில் ஒரு வருடத்தை சந்திரிகா அரசு பூர்த்தி செய்திருக்கிறது

மிகவும் கவலையைக் கொடுத்துள்ளது. பட்டியும் வாசுவும் இது தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவை நாடியுள்ளதாகவும் தெரிகிறது.

அரசின் கொள்கைகளை விமர்சிக்கும் பொ. ஜ. மு. உறுப்பினர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியின் ஆலோசகர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளனர். எந்த நிலைமையிலும் கடுமையான ஒழுக்க நடவக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள். ■


## உங்கள் மங்கள விழாக்களுக்கு

கல்யாணமா?
பிறந்தநாளா?
பூப்பு நீராட்டு விழாவா?
குழந்தைக்குத் தொட்டிலா?
எந்தவிதமான வைபவமென்றாலும்
வகை வகையான ருசியான சைவ, அசைவ
உணவு வகைகளுக்கு எங்களை நாடுங்கள்.
மண்டபத்தை அலங்கரித்து வருவோர் மனதைக் கவரும் அலங்கரிக்கும் பொருட்கள் ( DECORATION) ஜமக்காளம், கம்பளம் பெரும் சமையல் பாத்திரங்கள் , றைஸ் குக்கர்கள் போன்றவை எம்மிடம் வாடகைக்கு உண்டு.
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட
ஏகாந்த வீணைகளும் விற்பனைக்குண்டு.
25 KHAMA ROAD,
TOOTING ,
LONDON SW17 0EN,
TEL: 0181/6822775


## "கிறீஸ்தவம் வெள்ளைக் காரரின் மதமா?"

இல்லை, இது தவறானதும் மிகப் பரவலானதுமான தப்பெண்ணம். கிறிஸ்தவம் என்பது வெளிப்பாடு (REVELATION) . இறைவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய கிறிஸ்துவுக்கூடாக மனிதனுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். சிலுவையின் மரணம் உலக மீட்பரின் தியாகமான தெய்வீக அன்பை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, எந்தவொரு இனத்திற்கும் மாத்திரம் உரித்தான பிரத்தியேகமான சொத்து கிறீஸ்தவம் அல்ல. மனுக்குலத்தின் தகப்பனாகிய கடவுளையும் பூவுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் இணைக்கும் வழியும் சத்தியமும் ஜீவனும் தான் இயேசு. எனவே இப் பாதையை மதம் என்று மட்டுப்படுத்தக் கூடாது.'

BURNING BUSH, CHRISTIAN FELLOWSHIP, (BARNABAS J. ALEXANDER) 15 TORRIDGE ROAD, THORNTON HEATH, SURREY CR7 7EZ. ENGLAND.



படிப்பகம்

www.padippakam.com



# ஜெனிவா 'ஸ்தம்பிதம்'

## தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி திரண்டெழுந்த தமிழர் கூட்டம் ஜெனிவாவை ஸ்தம்பிக்க வைத்தது.

□ஜெயந்தி சந்திரமோகன்



ஈழமண்ணில் தமது சொந்தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும், எதிர்த்தும், கண்டித்தும், நீதி கேட்டும் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் சுவிற்சலாந்தின் ஜெனிவா நகரத்தில் கூடி அமைதியான ஊர்வலம் நடாத்தியது ஒரு சரித்திர நிகழ்ச்சி.

ஜெனிவாவில் அமைந்த ஐ. நா. சபை வளாகத்தில் தமிழீழ புலிக்கொடி ஏற்றப்பட்ட சம்பவம் ஈழப் போராட்ட வரலாற்றில் ஒரு அத்தியாயம்.

கடந்த மாதம் பதினான்காம் திகதி ஜெனிவா நகரத்தில் சுவிஸின் பல்வேறு மாநிலங்களில் வாழும் தமிழர்களும் பிரான்ஸ், ஜெர்மனி, லண்டன் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களும் ஆயிரம், ஆயிரம் எனக் கூடினார்கள். கார்கள், வான்கள், பஸ்கள் என்றும் ரயில்கள் என்றும் வந்து திரண்டனர். அதைவிட, தூரிச் நகரிலிருந்து முழுமையான ரயில் ஒன்றை ஜெனிவா வரை ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மக்களுக்கு வசதியாக சுவிஸ் விடுதலைப் புலிகள் கிளை ஏற்பாடு செய்திருந்தது. தூரிச் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட ரயில் வழியெங்கனும் உள்ள புகையிரத நிலையங்களிலும் நிறுத்தி, மக்களையும் ஏற்றிக்கொண்டு ஜெனிவா ரயில் நிலையத்துக்கு வந்தது.

ஜெனீவா ரயில் நிலையத்தின் அடித்தளத்திலிருந்து ஊர்வலம் பிற்பகல் சுமார் 2. 30 மணிக்கு புறப்பட்டது. ஊர்வலம் அசைந்து அசைந்து செல்ல ஆரம்பித்த சில நேரப் பொழுதில் தூரிச் ரயிலில் வந்த மக்கள் கூட்டத்தின் பின்னால் சேர்ந்து கொண்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிரமாண்டமான 'கட்அவுட்' ஊர்வலத்தின் முன்னால் ஊர்ந்து ஊர்ந்து செல்ல, அலைகடல் போல் திரண்ட மக்கள் விடுதலைக் கோஷங்களை 'பனர்களிலும்', சுலோக அட்டைகளிலும் தாங்கிய வண்ணம், விண்ணதிரக் கோஷமிட்டபடி சென்ற காட்சி நெஞ்சை நெகிழ வைத்தது.

ஐ. நா. மன்ற வளவுக்குள் ஊர்வலம் வந்து சேர்ந்து மக்கள் ஆயிரம் ஆயிரம் எனக் கூடிய சற்று நேரத்தில், தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடி ஏற்றும் வைபவம் நிகழ்ந்தது. விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

சுவிஸ் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் நடராஜா முரளீதரன் , முன்னாள் ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜா, அமெரிக்க சட்டத்தரணி திருமதி ஹரன் பாக்கர், சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் அன்ரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். ஊர்வலத்தினரின் கோரிக்கை அடங்கிய மகஜரை நடேசன் சத்தியேந்திரா, அன்ரன் பொன்ராஜா, வசந்தராஜா ஆகியோர் ஐ. நா. அதிகாரிகளிடம் கையளித்தனர்.

ஒரு ரயிலையே பதிவு செய்து, புலம் பெயர்ந்து வாழும் நாடொன்றில் இத்தனை பிரமாண்டமான ஊர்வலமொன்றை நடாத்திய சரித்திர நிகழ்ச்சியின் பின்னால் நின்ற விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் நடராஜா முரளீதரனும், அவரோடு ஒன்றிணைந்து உழைத்த நூற்றுக்கணக்கான தொண்டர்களும் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களில் தலைவர் பிரபாகரனின் அன்புக்குரியவர்களில் இந்த முரளியும் ஒருவர். ■

**தமிழீழம்தான் தீர்வு என்பதை உலகுக்கு உணர்த்திய மக்கள் எழுச்சி**



படிப்பகம்

www.padippakam.com





# தேசிய முன்னணி தடுமாறும் தலைவர்கள்

◻ கதிரவன்

இந்தியாவின் அடுத்த பொதுத்தேர்தலில் தேசிய முன்னணிக்கு பெரும்பான்மை கிடைத்தாலோ அல்லது பெரும்பான்மை கிடைக்கும் தருவாயில் இருந்தாலோ, பிரதமர் பதவிக்கு குறைந்தது ஐந்து பேர் போட்டியிடுவார்கள். இதனால் நினைத்துப் பார்க்க முடியாத அளவு சம்பவங்கள் ஏற்படலாம்.

மத்தியில் காங்கிரஸ் - பாரதீய ஜனதா கட்சிகள் அல்லாத 3-வது அணியை பலப்படுத்துவதில் பல்வேறு அரசியல் கட்சிகள் இப்போது மும்முரமாக செயல்பட்டு வருகின்றன.

தேசிய முன்னணி- இடதுசாரி கட்சிகள் கூட்டணிதான் அந்த 3-வது அணி. வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன் இந்த அணியை சக்தி வாய்ந்ததாக ஆக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய முன்னணி தலைவர்கள் பல்வேறு சக்தி வாய்ந்த அரசியல் கட்சிகளை ஒன்று திரட்ட வேண்டும் என்று திட்டமிட்டுள்ளனர். அவர்கள் அனைவரது கனவும், எண்ணமும் ஒன்றுதான். ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பதுதான் அது.

காங்கிரஸ்- பாரதீய ஜனதா அல்லாத கட்சிகள் என்று நாடு முழுவதும் ஏராளமாக இருக்கின்றன. ஜனதா கட்சி, சமாஜ்வாடி ஜனதா, பகுஜன் சமாஜ், அகாலி தளம், அசாம் கனபரிஷுத், ஜார்க்கண்ட் முக்தி முன்னணி, சமதாகட்சி, பீகார் மக்கள் கட்சி, தெலுங்கு தேசம், தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க, இ. கம்யூனிஸ்ட், வ. கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் (தீவிர கம்யூனிஸ்ட்).

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள கட்சிகள், முஸ்லிம் லீக்கட்சிகள், கேரளா காங்கிரஸ் கட்சியில் சில பிரிவுகள், கர்நாடக காங்கிரஸ் (பங்காரப்பா), மராட்டிய மாநிலத்தை சேர்ந்த பல்வேறு கட்சிகள் என தேசிய முன்னணியில் சேரத் தகுதியான கட்சிகள் உள்ளன.

இவற்றில் பாதி கட்சிகள் ஒரு அணியில் திரண்டாலும், 3-வது அணியாக

நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக தேசிய முன்னணியை சக்திவாய்ந்ததாக்க தீவிர முயற்சி நடக்கிறது.
அணியில் இணையும் ஒவ்வொருவரும் பிரதமர் பதவியையே குறிவைக்கிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com





## ஜெயலலிதாவின் ராஜதந்திரம்:

# தே. முன்னணியில் சேருவதாக வாய்திறந்து கூறவில்லை!

உருவெடுத்தாலும் எவ்வளவு காலம் நிலைத்து நிற்கும் என்று உறுதி கூற முடியாது.

இந்த கட்சிகளின் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் பிளவு மனப்பான்மை கொண்டவர்கள், தங்களுடைய கட்சியை தங்கள் பைக்குள் வைத்திருப்பவர்கள், ஒவ்வொருவரும் தனித் தன்மையுடன் திகழ்பவர்கள், தான் என்ற எண்ணம் கொண்டவர்கள். சுயநல எண்ணத்தை தங்களது குணமாக கொண்டவர்கள். இவர்களை வைத்து 3-வது அணி என்ற கூட்டமைப்பை ஏற்படுத்துவது நடைமுறைக்கு இயலாத ஒன்று.

24-ந் தேதி தேசிய முன்னணி-இடதுசாரி கட்சி தலைவர்கள் கூட்டம் டெல்லியில் 2 மணி நேரம் நடந்தது. அந்த கூட்டத்தில் ஒன்றரை மணி நேரம் பாரதிய ஜனதா கட்சி பற்றியும், அக்கட்சி தேர்தலை முன்னிட்டு அமைத்து வரும் வியூகம் பற்றியும் விவாதிக்கப்பட்டது. தேசிய முன்னணியை பலப்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

தேசிய முன்னணியை பலப்படுத்துவது மற்றும் ஒற்றுமை ஏற்படுத்துவது போன்ற முயற்சி கடந்த ஒரு வருடகாலமாக நடைபெற்று வருகிறது. இருந்த போதும் தேசிய முன்னணி தலைவர்களால் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பது தான் உண்மை. இந்த ஒரு வருடத்தில் ஜனதா தளம் 2 ஆக உடைந்து சமதா கட்சி என்ற புதிய கட்சி தோன்றியதுதான் மிச்சம்.

ஜனதா தளத்தை பொருத்த வரை கட்சி தொடர்ந்து உடைந்து கொண்டே வருகிறது. கட்சியில் 12 தலைவர்கள் இருந்தால் 12 பேரும் ஒரு பிரச்சினையில் 12 கருத்துக்களை தெரிவிப்பார்கள். தேசிய முன்னணியில் யாரை சேர்க்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு இடையே ஒருமித்த கருத்து கிடையாது. ஆளுக்கொரு விதமாக கருத்து கூறி அதை நிறைவேற்றுவதில் தீவிரமாக உள்ளனர்.

**அ. தி. மு. க. வுடன் உறவு:**

ஆந்திராவில் தெலுங்கு தேசம் வெற்றி பெற்றதும் பிஜுபட்நாயக் ராமராவிடம், ஜெயலலிதாவை பதவி ஏற்பு விழாவிற்கு அழைக்கும்படி யோசனை கூறினார். இந்த சம்பவம் ஏகப்பட்ட ஆட்சேபனையையும், சச்சரவையும் ஏற்படுத்தியது. பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ள ஜெயலலிதா சம்மதித்ததன் மூலம் ஒரே கல்லில் 2 மாங்காய்களை வீழ்த்தினார். பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்வதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தனது அரசியல் விரோதி கருணாநிதியை அவமானப்படுத்தலாம் என்று ஜெயலலிதா நினைத்தார்.

மேலும் காங்கிரஸ் தலைமைக்கு எச்சரிக்கை விடுக்கவும் அவர் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டார். அதைத் தொடர்ந்து தேசிய முன்னணியில் அ. தி. மு. க. வை சேர்க்கும் முயற்சியில் தேசிய முன்னணி தலைவர்கள் தீவிரமாக இறங்கினார்கள். இதற்கு வி. பி. சிங் விருப்பம் தெரிவிக்கவில்லை. இருந்த போதும் அ. தி. மு. க. வை இணைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்றன. இவ்வளவிற்கும் தேசிய முன்னணியில் சேருவதாக ஜெயலலிதா வாய்திறந்து கூறவில்லை.

**ஜெயலலிதாவின் ராஜ தந்திரம்:**

இந்த இடத்தில் ஜெயலலிதாவின் ராஜதந்திரத்தை பாராட்டியே தீர வேண்டும். தேசிய முன்னணி-காங்கிரஸ்-பாரதீய ஜனதா இந்த மூன்று கட்சிகளுடன் எப்போது வேண்டுமானாலும் கூட்டு வைத்துக் கொள்வதற்காக அவர் தனது வியூகங்களை அமைத்து கதவுகளை திறந்து அவைத்தே உள்ளார்.

அ. தி. மு. க. வை இணைக்க முயற்சித்த தேசிய முன்னணி தலைவர்களிடம், இ. கம்யூனிஸ்ட் கட்சி ம. தி. மு. க. வுடன் உறவு வைத்திருப்பதால் அ. தி. மு. க. தேசிய முன்னணியுடன் உறவு வைக்க இயலாத நிலையில் உள்ளது என்று கடிதம் எழுதி உள்ளார். இதனால் இணைப்பு முயற்சி சற்று தாமதப்படுத்தப்பட்டு உள்ளது.

அ. தி. மு. க. இணைந்து விடும் என்ற நம்பிக்கையில் தேசிய முன்னணி தலைவர்கள் தி. மு. க. வை சட்டை செய்யவில்லை. தேசிய முன்னணி தலைவர்களின் நடவடிக்கைகள் தங்களுக்கு இழைக்கப்படும் அவமானமாக கருதி தி. மு. க., தேசிய முன்னணியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தது.

கடைசியில் தேசிய முன்னணிக்கு அ. தி. மு. க. வும் கிடைக்காமல் தி. மு. க. வும் இல்லாமல் போய் விட்டது. அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதை என்ற பழமொழிக்கு இது சிறந்த உதாரணமாக அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com



## அடுத்த பிரதமர் தான் என்பதில் ராமராவுக்கு நம்பிக்கை

அ. தி. மு. க. வை இணைப்பதால் தேசிய முன்னணிக்கு பிரச்சினைகள்தான். இடது மற்றும் வலது கம்யூனிஸ்ட் கட்சிகள் அ. தி. மு. க. வை தேசிய முன்னணியில் சேர்க்க வெவ்வேறு காரணங்களுக்காக கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன.

அ. தி. மு. க. வை இணைத்தால் நாங்கள் வெளியேறுவோம் என்று வ. கம்யூனிஸ்டு பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா எச்சரித்து உள்ளார்.

**முலாயம்சிங் யாதவ்:**

உத்தர பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் ஆட்சியில் இருந்த போது தேசிய முன்னணி தலைவர்கள் அவரை எப்படியாவது முன்னணியில் இணைத்து விடவேண்டும் என்று திட்டம் போட்டனர். ஜனதா தள தலைவர்கள் சிலர் இதில் தீவிரமாக இருந்தனர். ஆனால் அங்கு மாயாவதி ஆட்சியை பிடித்ததும் நிலைமை தலைகீழானது. என்ன செய்வது என்று தெரியாமல் தலைவர்கள் திணறுகின்றனர். நிலைமையை சமாளிக்க பிஜு பட்நாயக்கும், சந்திரசேகரும், தேவகவுடாவும், முலாயம்சிங்கை விரும்புகின்றனர்.

அதே நேரத்தில் முலாயம் சிங்கை இணைக்கக் கூடாது என்று ஜனதா தளத்தில் உள்ள சில சக்தி வாய்ந்த தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். லல்லு பிரசாத் யாதவும், சரத் யாதவும் எதிர்ப்பு தெரிவிக்கும் தலைவர்கள் வரிசையில் அடங்குவார்கள்.

முலாயம்சிங் யாதவிற்கு ஜனதா தளத்தில் ஏற்கனவே சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டு உள்ளன. இதன் காரணமாக முலாயம்சிங் யாதவ் தேசிய முன்னணியில் இணைய மறுத்து விட்டார். மாறாக உத்தர பிரதேசத்தில் தனது கட்சியை பலப்படுத்தும் முயற்சியில் இறங்கி உள்ளார்.

உத்தர பிரதேசத்தை பொருத்த வரையில் ஜனதா தளத்திற்கு எந்த ஆதரவும் கிடையாது என்பது அவரது கணிப்பு. தேர்தலின் போது ஜனதா தளத்திற்கு அவர்களது உண்மையான நிலையை காட்ட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

**மாயாவதி:**

தற்போது தேசிய முன்னணி உத்தர பிரதேசத்தில் நம்பி இருக்கும் ஒரே கட்சி பகுஜன் சமாஜ் கட்சிதான். வலது கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா சமீபத்தில் கூறுகையில், பகுஜன் சமாஜ் கட்சியை எங்களது கட்சி அரசியல் ரீதியாக தீண்டாமை கட்சியாக கருதவில்லை. உத்தர பிரதேசத்திற்கு வெளியே, அக்கட்சி பாரதீய ஜனதாவுடன் உறவை முறித்துக் கொண்டு வந்தால் அக்கட்சியுடன் கூட்டு வைப்பதற்கு ஆதரவு தெரிவிப்போம் என்று கூறினார்.

தேசிய முன்னணியில் உள்ள மற்ற கட்சிகளின் எண்ணமும் இதுவே. மாயாவதி இதற்கு சம்மதித்தால் அவரது ஆட்சி கலையும். ஆகவே அது தற்கொலைக்கு சமமாகும்.

பகுஜன் சமாஜ் கட்சியும் பாரதீய ஜனதா கட்சியும் தொகுதி உடன்பாடு பற்றி பேசிக் கொள்ளவில்லை என்றாலும் கூட இருகட்சிகளும் தொகுதி உடன்பாட்டிற்கு தயாராகவே உள்ளன. ஆகவே மாயாவதி ஆட்சியில் இருந்து கொண்டே தேசிய முன்னணியில் சேருவாரா என்பது சந்தேகமே.

தேசிய முன்னணியில் நிலவும் குளறுபடிகளுக்கு இவை உதாரணங்களே. ஒருவேளை வரும் தேர்தலில் தேசிய முன்னணிக்கு பெரும்பான்மை கிடைத்தாலோ அல்லது பெரும்பான்மை கிடைக்கும் தருவாயில் இருந்தாலோ, பிரதமர் பதவிக்கு குறைந்தது 5 பேர் போட்டியிடுவார்கள்.

இதனால் நினைத்துப் பார்க்க முடியாத அளவு சம்பவங்கள் ஏற்படலாம். இதனால் பாதிக்கப்படுவது நிலையான ஆட்சி என்ற கொள்கையே. பல்வேறு முக்கிய கொள்கைகள், வெளிநாட்டு உள்நாட்டு கொள்கைளில் சமாதானம் செய்து கொள்ள வேண்டி வரும். உத்திர பிரதேசத்திலும் பீகாரிலும் நடைபெறும் சர்வாதிகார நிலைமை நாடு முழுவதும் ஏற்படலாம். முலாயம்சிங் யாதவ், லல்லு பிரசாத் யாதவ் ஆகியோரது அரசியல் கலாச்சாரம், என். டி. ராமராவின் குடும்ப அரசியல் கலாச்சாரம் ஆகியவை வளரும்.

**குழம்பிய நிலை:**

இப்படிப்பட்ட நிலையில் தான் தேசிய முன்னணி உள்ளது. தங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? தங்களது எதிர் காலம் என்ன? தங்களது லட்சியம் என்ன? தேர்தல் பிரசாத்தின் போது மக்களிடம் எடுத்து வைக்கப்போகும் முக்கிய பிரச்சினைகள் என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு விடை கண்டறிய முடியாமல் குழம்பிய குட்டையாய், கலங்கிய நதியாய் தேசிய முன்னணி தலைவர்கள் உள்ளனர்.

**அடுத்த தேர்தலில் தேசிய முன்னணி வெற்றிபெறும் நிலை ஏற்படுமானால் குறைந்தது ஐந்து பேராவது பிரதமர் பதவிக்கு போட்டிபோடுவார்கள்**


படிப்பகம்

www.padippakam.com



## வை. கோபாலசாமி

# தமிழகத்தின் புலி!

### விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் அதற்கு ஆதரவாக துணிந்து குரல்கொடுக்கிறார்

□ பி.பி.சி. ஆனந்தி

டில்லி ராஜ்யசபாவில் வை. கோபால்சாமி தி.மு.க. உறுப்பினராக இருந்த காலத்தில், "எனக்கு ஈழத்தமிழன் தான் முக்கியம். இந்தியன் இரண்டாம் பட்சம் என்று பேசியது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. டில்லியில் 'டைகர்' என்று செல்லமாக அழைக்கப்பட்டவர்". இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதனால், ராஜ்யசபாவில் எப்பொழுதும் இலங்கை விவகாரம் குறித்து பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணுவார். இலங்கை விவகாரம் 'சூடு'பிடித்தபோது, கொலையுண்ட ராஜீவ் காந்தி பிரதமர். அச்சமயத்தில், 1989 ல் ஈழத்தின் வன்னிக்காட்டுக்குச் சென்று புலிகளுடன் வாழ்ந்துவிட்டு வந்தவர். கலைஞரின் 'போர்வாள்' என்று வர்ணிக்கப்பட்ட வை. கோ. கலைஞரால் தூக்கி வீசப்பட்டபோது, ஆற்றல் மிக்கப் பீரங்கிப் பேச்சாளரான இவர், கலைஞருக்குச் சவால் ஆனார். வை.-கோ.வின் மறுமலர்ச்சி தி.மு. கழகம் உதயமானது.

நெல்லை மாவட்டம் சங்கரன் கோவிலிலிருந்து பதினெட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கலிங்கப் பட்டி கிராமத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் வை.-கோபாலசாமி, ஒரு சகோதரர், மூன்று சகோதரிகளுடன் பிறந்த வை. கோ. வின் தந்தை வையாபுரி நாயக்கர். நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையிலுள்ள செயின்ட் சேவியர் கல்லூரியின் பி. ஏ. பட்டதாரி. பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் எம். ஏ. மாணவர், சென்னை சட்டக்கல்லூரி வழக்கறிஞர்.

1978 இல் தி. மு. கவினா ராஜ்யசபா எம். பி. ஆனார். அப்போது மொரார்ஜி தேசாய் பிரதமர். ராஜ்ய சபா உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும். குறிப்புக்கள் ஹிந்





படிப்பகம்

www.padippakam.com



"தமிழீழம் தான் இலங்கையில் உள்ள தமிழர்களின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு என்று 1984ல் தி. மு. க. தீர்மானம் செய்தது. ஆனால் இன்று அதன் நிலையை கைவிட்டு விட்டது.

நாங்கள் ம.தி.மு.க.வின் முதலாவது மாநாட்டிலேயே தனித்தமிழ் ஈழம் தான் தீர்வு என்ற எமது கொள்கையை பிரகடனம் செய்து இருக்கிறோம்."



தியில் இருந்தன. அதை எதிர்க்கும் விதத்தில் கிழித்துப்போட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர், 'ஈழகேசரி'க்காக பி. பி. - ஸி. ஆனந்தி அவரைப் பேட்டி கண்டபோது, மனம் விட்டு பதில்களை கூறினார்.

**கேள்வி:** நீண்ட நெடுங் காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்கள் அங்கம் வகித்தவர். அரசியலில் அனுபவசாலி. அப்படி இருக்க திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஏன் பிரிந்து சென்றீர்கள்?-

**பதில்:** திராவிட முன்னேற்றக் கழகத்தில் கலைஞரின் சுயநலம் காரணமாகவும், அவரது குடும்ப நலன்களுக்காக லட்சோபலட்சம் தொண்டர்களின் தியாகம் பாழ்படுத்தியதன் காரணமாகவும், இந்த நீதி நியாயத்துக்காகக் குரல் கொடுத்த என்னைக் கலைஞர் வெளியேற்றினார்.

**கேள்வி:** உங்களுக்கு தமிழ் நாட்டில் எந்தளவுக்கு ஆதரவு இப்போது இருக்கிறது?

**பதில்:** தமிழ்நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கிற சக்தியாக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் பரிணமித்துள்ளது.

**கேள்வி:** அடுத்த தேர்தலில் உங்களுக்கு எந்தளவுக்கு, எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

**பதில்:** ஜெயலலிதா ஆட்சியை விழுத்தக்கூடிய சக்தியாக மறுமலர்ச்சி தி.-மு. கழகம் திகழும். எனவே, எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும் என்பது தேர்தல் வருகிற நேரத்தில் அது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பது நல்லது.

**கேள்வி:** இப்போது நீங்கள் தனிக்கட்சியாகப் பிரிந்து இருக்கிறீர்கள். உங்களது கொள்கைகள், தி. மு. க. கொள்கையிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றனவா? அதாவது, அக்கொள்கையிலிருந்து மாறுபட்டு இருக்கிறீர்களா?

**பதில்:** அறிஞர் அண்ணா வகுத்த கொள்கைப் பாதையில் இருந்து கலைஞரின் தலைமையில் உள்ள தி. மு. க. விலகிச் சென்று விட்டது. எனவே தான் அண்ணா வகுத்த லட்சியங்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று நாங்கள் முன் வந்து நிற்கிறோம். நாங்கள் கொள்கைகளைச் சமரசம் செய்யவில்லை. உதாரணமாகத் தமிழீழப் பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம். 1984 ல் , தமிழீழம் தான் இலங்கையில் உள்ள தமிழர்களின் தமிழ்த்தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு என்று தி. மு. க. தீர்மானம் செய்தது. புதுக்கோட்டை பொதுக்குழுவிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், கடந்த மூன்றாண்டு காலமாக 'தமிழீழம்' தான் தீர்வு என்ற நிலையை தி. மு. க. கைவிட்டு விட்டது. 'கிடைத்தால் மகிழ்ச்சி அடைவோம்' என்றும் அதற்காக நாங்கள் எவர் மீதும் திணிக்கமாட்டோம் என்றும், தமிழீழத்துக்காக தமிழ் நாட்டிலிருந்து குரல் கொடுக்கமாட்டோம் என்றும், சமீபத்தில் கூட கலைஞர்திருச்சியில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். நாங்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் முதலாவது மாநில மாநாட்டில், திட்டவட்டமாக எங்கள் கொள்கையைப் பிரகடனம் செய்து இருக்கின்றோம். தனித்தமிழ் ஈழமே பிரச்னைக்குத் தீர்வு ஆகும் என்றும், அதை எவரும் தடுக்க முடியாது என்றும் நாங்கள் எங்களுடைய தீர்மானத்தை வலியுறுத்தியுள்ளோம். தமிழ் ஈழத்துக்கு எதிராக இந்திய அரசு எந்தவிதத்தில் சிங்களப் பேரினவாத அரசுக்கு உதவி செய்ய முயன்றாலும் அதனை முழுப்பலத்தோடும் மறுமலர்ச்சிக் கழகம் எதிர்க்கும். அதற்காக என்ன விலையும் கொடுக்கும் என்பதனையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.



**கேள்வி:** உங்களுடைய தமிழீழ ஆதரவை இந்தச் சமயத்தில் வெளியிட என்ன காரணம்?

**பதில்:** பேச்சுவார்த்தை என்ற ஒரு நாடகம் ஆடி, சர்வதேச நாடுகளிடம் பெருமளவில் ஆயுதங்களை வாங்கிக் குவித்து, தமிழ் ஈழத்தின் மீது மிருகத்தமான தாக்குதலுக்குத் தனது இராணுவத்தை சந்திரிகா தயார் செய்து வந்த கார



படிப்பகம்

www.padippakam.com



ணத்தாலும், இந்திய அரசோடு பேசி, இந்திய அரசின் உதவியைப் பெறுவதற்கான முயற்சிகளிலும் ஓரளவு சந்திரிகா வெற்றி பெற்று வந்துள்ளார் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டதாலும், இந்த அபாயகரமான காலகட்டத்தில் தமிழீழ மக்களுக்காகக்



குரல் கொடுத்து தனித்தமிழ் ஈழத்தைப் பெறுவதற்காக போர்க்களத்தில் நிற்கின்ற விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துச் சொல்லவேண்டியது எங்களின் தலையாய கடமை என்று கருதினோம். அதனால் தான் மறுமலர்ச்சி தி.மு. கழகம் மாநில மாநாட்டில் வெளியிட்டோம்.

**கேள்வி:** உங்களுடைய இந்தச் செயல்பாட்டின் காரணமாக கட்சிக்குள்ளேயே சில அதிருப்திகள் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. நீங்கள் பகிரங்கமாக விடுததலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பது குறித்து கட்சிக்குள் சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பது உண்மையா?

**பதில்:** இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நன்றி தெரிவிக்கவேண்டும். ஏனெனில், தமிழ் நாட்டில் அக்கறையுள்ள சில சக்திகள் தமிழீழத்துக்கு விரோதமான கருத்தைக் கொண்டிருக்கக்கூடிய சில தலைவர்கள் இப்படியான அபாண்டமான பொய்ச் செய்திகளைப் பரப்பி வருகிறார்கள். மறுமலர்ச்சி தி.மு. கழகத்தில் தனித்தமிழீழம் குறித்து கட்சி மட்டத்தில் வாதிக்கப்பட்டு, அனைவரது ஏகோபித்த ஆதரவைப் பெற்றுத்தான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். அது மட்டுமல்ல, 93 ஆம் ஆண்டு டிசம்பரில் எங்கள் பொதுக்குழுவில் தனித்தமிழீழம் தான் தீர்வு என்று தெரிவித்துள்ளோம். அதற்குப் பிறகு பாண்டிச்சேரியல் நடந்த பொதுக்குழுவிலும் அந்தத் தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறோம். எங்கள் நிலைப்பாடு தொடர்ந்து ஒரே உறுதியான நிலையிலே தான் இருக்கின்றது. எனவே, கட்சிக்குள் இது குறித்து எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை. அப்படிச் சொல்லப்படுவது முற்றிலும் பொய்.

**கேள்வி:** உங்களுக்கு இளைஞர்கள் மத்தியில் தான் ஆதரவு இருக்கிறது: அதாவது இளைஞர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். இளமை என்றால், இளமைத் துடிப்பில் ஒருவித உணர்ச்சி வேகத்தில் உங்களை ஆதரிப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட இளைஞர்களிடம் தான் உங்கள் செல்வாக்கு இருக்கிறது என்று சொல்லப்படுவதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது?

**பதில்:** உலக வரலாற்றில் இளைஞர்கள் தான் ஒவ்வொரு நாட்டின் விடுதலை இயக்கங்களை முன்னெடுத்து அந்தந்த நாடுகளுக்கு விடுதலை தேடிக் கொடுத்திருக்கிறார்கள். சரித்திரத் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடியவர்கள், இளைஞர்கள் தான். இளைஞர்கள் எங்கே இருக்கிறார்கள், எங்கே இயங்கிக் கொண்டிருக்கிறார்களோ, அங்கே தான் அந்த இயக்கங்கள் வெற்றி பெறுகின்றன. ஒருஇளைஞன் தன் தாயை, தன் தகப்பனை, உடன் பிறந்த சகோதரியை, அண்ணனை, தம்பியை தனது கருத்துக்கு ஏற்றவாறு அவர்களுடைய மனதில் பதிய வைத்து அவர்களை திசை திருப்ப முடியும். ஒவ்வொரு குடும்பத்திலும் இளைஞன் ஒருவனினால் அற்புதமே செய்ய முடியும். ஆகவே, இளைஞனுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் அவன் செயல்படுகிறான். மொத்தத்தில், ஒரு இளைஞனுக்குப் பின்னால், அவனைச் சார்ந்த ஒரு குடும்பமும் இருக்கிறது என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது.

**கேள்வி:** சரி, தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் தெற்குப் பகுதியில் தான் உங்களுக்கு ஆதரவு இருக்கிறது. நகரப் புறங்களில், முக்கியமாக சென்னை போன்ற நகரங்களில் உங்களுக்கு ஆதரவு இல்லை என்று சொல்லப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** தமிழ் நாடு முழுவதிலுமே எங்களுக்குப் பெரும் ஆதரவு இருக்கிறது. கிராமங்கள் பலம் வாய்ந்த பெரும் கோட்டைகளாகத் திகழ்கின்றன. ஓராண்டு காலத்தில் நகரங்களில் ஆதரவு வளர்ந்து கொண்டிருக்கிறது. எங்களுக்கு இருக்கக்கூடிய பெரும் ஆதரவு சக்தியை வருகிற காலம் நிச்சயம் நிரூபிக்கும். காலம் தான் இதற்கு சரியான பதில்.

**கேள்வி:** தமிழகத்தின் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக நின்று போராடப் போகிறீர்கள். அதாவது, "எங்களிடம் ஆட்சியை ஒப்படையுங்கள்; நாங்கள் நல்லாட்சி நடாத்தி, நல்லதை செய்வோம்" என்று வாக்காளர்களுக்கு கூறப்போகிறீர்கள். அப்படியானால் இப்போதைய ஜெயல



"தமிழீழத்துக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றியதால் கட்சிக்குள் எதிர்ப்பு என்று கூறப்படுவது முற்றிலும் பொய்யான கூற்று.

தமிழ்நாடு முழுவதிலும் எங்களுக்கு பெரும் ஆதரவு இருக்கிறது. கிராமங்கள் பலம் வாய்ந்த பெரும் கோட்டைகளாகத் திகழ்கின்றன. நகரங்களில் ஆதரவு பெருகிவருகிறது."



படிப்பகம்

www.padippakam.com

AIRLANKA
*It's a taste of Paradise*

# SKYLINK



# AIRLANKA SPREADS ITS WINGS TO THE NORTH OF BRITAIN

IATA

## YOU CAN OBTAIN YOUR AIRLANKA TICKETS FROM MANCHESTER AND GLASGOW

**SUITE 504**
**CHURCHGATE HOUSE**
**56 OXFORD STREET**
**MANCHESTER M1 6EU**
**TEL: 0161 236 3114**



**ROOM 226**
**BALTIC CHAMBERS**
**50 WELLINGTON STREET**
**GLASGOW G2 6HU**
**TEL: 0141 221 2516**

**10-16 RATHBONE STREET**
**LONDON W1 P1HA**
**TEL: 0171 396 9944**
**TEL: 0171 396 9922**

*Srilanji DeSigns*



படிப்பகம்

www.padippakam.com



லிதா ஆட்சி மக்களுக்குக் கொடுப்பதை விட புதிதாக நீங்கள் எதனை மக்களுக்குக் கொடுப்பீர்கள்?

பதில்: தமிழ்நாட்டு மக்களை நாசப்படுத்திக் கொண்டிருக்கிற ஜெயலலிதா ஆட்சியில் லஞ்சமும் ஊழலும் தலைவிரித்து ஆடுவது மக்கள் நலனுக்கு எதிராக வளர்ந்து இருக்கிற கேடுகளாகும்.

அரசியலில் நேர்மை; பொது வாழ்வில் தூய்மை; லட்சியத்தில் உறுதி என்ற மூன்று முழக்கத்தை முன் வைத்துள்ளோம். லஞ்சத்தை ஊழலை வேரறுத்து, தமிழ் நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்து இந்திய அரசியலில் மாநில சுயாட்சியை தமிழகத்துக்குப் பெற்று, தமிழ்நாடு தொழில் வளம் பெறவும், தமிழகம் சுபீட்சம் அடையவும் நாங்கள் நல்ல திட்டங்களை முன் வைத்து மக்கள் நம்பிக்கையைப் பெறுவோம்.

கேள்வி: நல்ல திட்டங்களை வைத்திருக்கிறீர்களா?

பதில்: நல்ல திட்டங்களை வைத்துள்ளோம். அதைத் தேர்தல் பிரகடனத்தில் வெளியிடுவோம்.

கேள்வி: இன்னொரு விஷயம். தமிழ் நாட்டில் தற்போது தனியார் டி.வி. க்கள் பெருமளவில் தோன்றி, தமிழ் மொழியையும், கலாச்சாரத்தையும் 'கொலை' செய்து வருகிறது. இதனால் பொது இடங்களில் தமிழ் மொழி அழிந்து வருகிறது. இது குறித்து ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா?

பதில்: மிகவும் வேதனைக்குரிய சூழ்நிலை இருப்பது உண்மைதான். அதுவும் தனியார் டி.வி.யின் தாக்கம் அதிகரித்துவிட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை. விரசமான உணர்ச்சிகளைத் தூண்டிடும் பாடல் காட்சிகளை 24 மணி நேரமும் காட்டி, பகுத்தறிவுக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவது உண்மையில் கண்டனத்துக்குரியதொன்றாகும்.



இந்தச் சூழ்நிலையை எதிர்த்தும், கண்டித்தும் மக்கள் மத்தியில், தீவிரமான பிரசாரத்தை மறுமலர்ச்சி தி. மு. கழகம் செய்யும்.

கேள்வி: தமிழீழம் தான் தீர்வு என்று சொல்கிறீர்கள். சாத்தியமாகக் கூடிய விஷயமா?

பதில்: உலக வரலாற்றிலேயே இதுவரை எங்குமே நிகழ்த்தப்படாத சாகசத்தை ஈழத்தைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகள் போர்களத்தில் நிகழ்த்தி வருகிறார்கள். அவர்கள் செய்து கொண்டிருக்கும் மகத்தான தியாகம் தமிழீழத்தை அமைத்துத் தரும். அந்த முழுப்பெருமையும் விடுதலைப் புலிகளுக்கே போய்ச் சேரும்.

கேள்வி: இலங்கைத் தமிழ் மக்களுக்கு 1983 அல் அநீதி நடக்கின்ற போது எழுந்த உணர்வு அலைகள் போல், இப்போது தமிழகத்தில் எழும்பவில்லை, என்பது மனதுக்குள் அரிக்கிறது. சந்திரிகா அரசு வடபகுதி மீது தாக்குதலை மேற்கொண்டு, பல உயிர்களை பலி கொண்டு லட்சோப லட்ச மக்களை அகதிகளாக்கிய பயங்கரங்கள் சமீபத்தில் நடந்த போது பலமான உணர்வலைகள் எழும்பவில்லையே. இதற்கு ராஜீவ் காந்தி படுகொலை காரணமா? தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு குறைந்து விட்டதா?

பதில்: குறையவே இல்லை. தான் ஆடா விட்டாலும், தன் சதை ஆடும் என்பதைப் போல, ஈழத்தமிழ் மக்கள் வேதனைக்குள்ளாகின்றபோது, தமிழ்நாட்டில் உள்ள மக்களும் இயற்கையாக, அவர்களுக்காக அனுதாபம் கொள்வார்கள். சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் யுத்தம் என்றால் தமிழர்கள் தான் வெற்றி பெறவேண்டும் என்று இங்குள்ள சாதாரண கிராமத் தமிழனும் நினைக்கின்றான்.

எனவே, ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாடு தமிழர்களின் ஆதரவு உணர்ச்சி நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. சில பத்திரிகைகளும், மற்றும் தமிழீழத்துக்கு விரோதமானவர்களும் தமிழகத்தில் ஆதரவு இல்லை என்று பொய்ப் பிரசாரத்தை மேற்கொள்கிறார்கள்.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்களை இந்தியாவுக்கு அனுப்பும்படி இந்திய அரசு இலங்கை அரசைக் கேட்டிருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன? உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: தடாச்சட்டத்தின்



"உலக வரலாற்றிலேயே இதுவரை எங்குமே நிகழ்த்தப்படாத சாகசத்தை ஈழத்தைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகள் போர்க்களத்தில் நிகழ்த்தி வருகிறார்கள். அவர்கள் செய்துகொண்டிருக்கும் மகத்தான தியாகம் தமிழ்ஈழத்தை அமைத்துத் தரும். அந்த முழுப் பெருமையும் விடுதலைப் புலிகளுக்கே போய்ச்சேரும்."



படிப்பகம்

www.padippakam.com



கீழ் இக்கொலை வழக்குக் குறித்துச்செய்யப்பட்ட விசாரணையில் நீதி குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது. ஜெயின் கமிஷன் முன்பு பல தரப்பட்ட வாக்குமூலங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் சிங்கள அரசு விடுதலைப் புலிகள் தலைவர் தம்பி பிரபாகரனை அழிப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு முயற்சித்து வருகிறது. எனவே, இந்திய அரசு தன்னுடைய கட்சியில் இருக்கக்கூடிய அரசியல் பிரச்னைக்காக காங்கிரஸ் எடுக்கின்ற முடிவுகளுக்கு உடந்தையாக இருக்கக்கூடாது. எனவே, தம்பி பிரபாகரன் அவர்களை இங்கே கொண்டு வர முயற்சிப்பதாகச் சொல்லப்படுவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். அவரை நெருங்கமுடியாது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். லட்சத்துக்கும் மேற்பட்ட படையினர் வன்னிக்காடுகளில் இருந்தபோதே அவரை நெருங்க முடியவில்லை. எனவே, நெருங்கமுடியாது என்ற உண்மை ஒரு பக்கம் இருக்க, அவரை இங்கு கொண்டு வருகிற முயற்சிகளை நாங்கள் எதிர்க்கின்றோம். தமிழீழ விடுதலை, தம்பி பிரபாகரன் தலைமையிலேயே மலரும் என்பதே காலம் உணர்த்தப் போகும் உண்மை. ■

**M.K.SRI & CO**

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

93 WALTON AVENUE
SOUTH HARROW
MIDDX HA2 8QY
TEL: 081 423 2141
FAX/TEL: 081 248 3383

PARTNERS:
*M.K.Sritharan*
*N.Krishnarajah*

We Specialise in:
*IMMIGRATION * CRIME
* CONVEYANCING * MATRIMONIAL
* STATE BENEFITS * TRAFIC OFFENCES
* ADVICE
&
ASSISTANCE AT POLICE

LEGAL AID WORK
UNDERTAKEN

**கற்பகம்**
CASH & CARRY

இறக்குமதி செய்து
மலிந்த விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
சகல
பொருட்களையும்
லண்டனில்
பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய
தமிழ் நிறுவனம்

வியாபார
விசாரணைகள்
வரவேற்கப்படுகிறது

**KATPAKAM**
36,LOAMPIT HILL
LONDON SE 13
TEL:0181 694 8810



படிப்பகம்

www.padippakam.com



## சந்திரிகாவின் சதி

# இதயம் இல்லாத தமிழர்தாயகம்!

**மணலாறு தமிழர்களின் இதயபூமியாகக் கருதுப்படுகிறது. இதயம் பறிபோன பின்னர் அங்கங்களால் என்ன பயன்?**

□ அபிமன்யூ

இனப்பிரச்னைக்கான தன்னுடைய தீர்வு யோசனைகளை அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்க்கட்சிகளும், புத்திஜீவிகளும் கண்ணை மூடிக்கொண்டு இதனை வரவேற்பதில், போட்டி போட்டுக்கொண்டுள்ளார்கள். இதுவரை முன் வைக்கப்பட்ட திட்டங்களில் இதனைப் போன்ற ஒன்றை தாம் கண்டதே இல்லை என கூட்டணித் தலைவர்கள் புல்லரித்துப் போய் நிற்கின்றார்கள். அரச படைகளுடன் இணைந்து நின்று போராடும் புளொட்டும், ஈ.பி.டி.பியும் அரசின் நல்லெண்ணத்தையிட்டு புளகாங்கிதம் அடைந்துள்ளன. ஆனால், ஒரு சில திருத்தங்களைச் செய்தால் நல்லது என அரசுக்கு நோகாமல் தெரிவித்துள்ளன.

ஆனால், எந்த அதிகாரப் பரவுலாக்கல் திட்டமும், திட்டவட்டமாகக் கூறவேண்டிய "அதிகார அலகு" இந்த யோசனையில் கூறப்படவில்லை.

வடக்கு -கிழக்கு இணைப்பு என கூறப்பட்டுள்ள போதும், வடக்கு -கிழக்கின் எல்லைகள் மாற்றியமைக்கப்படுவதன் மூலமே இணைப்பு வழங்கப்படும் என ஒரு "பொறி" வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மூவின மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் எல்லைகள் மாற்றியமைக்கப்படும் என அரசின் திட்டம் கூறுகிறது. ஆனால் மூவின மக்களையும் திருப்திபடுத்தக் கூடிய திட்டம் எதனையும் கருத்தொருமைப்பாடு மூலம் ஏற்படுத்துவது சாத்தியமாகப் போவதில்லை. இன்று இனப் பிரச்னைக்கான தீர்வாக முன் வைக்கப்பட வேண்டியது அதிகாரப் பரவலாக்கல் மட்டுமல்ல அதற்கான அலகே முக்கியம். தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளை வெட்டிக் குறைத்து - அரித்தெடுத்து ஒரு அலகை வழங்குவது அவர்களது அபிலாஷைகளை எந்த வகையிலும் தீர்க்கப் போவதில்லை. பத்து வருடங்களுக்கு முன்னர் பூட்டானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தமிழர்களின் சார்பில் நான்கு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது இதில் முக்கியமானது. திம்புவில் முன் வைக்கப்பட்ட இந்த நான்கு கோரிக்கைகளுமே எந்த ஒரு தீர்வுக்கும் அடிப்படையாக அமையக் கூடியவை. இவற்றை அன்றைய ஜே. ஆர். அரசும் ஏற்கவில்லை. இன்றைய சந்திரிகா அரசும் ஏற்கத் தயாராக இல்லை. இதனை அரசாங்கத்தின் இன்றைய தீர்வு யோசனைகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. மாகாண எல்லைகளை மாற்றியமைப்பதென்பது தாயகக் கோட்பாட்டை உடைப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 1948 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் பலன்களை 'அறுவடை' செய்வதற்கும் இத்திட்டம் அரசுக்கு உதவுவதாக அமையும்.



### அபகரிக்கப்பட்ட தமிழர் இதய பூமி

அதாவது திட்டவட்டமான அதிகார அலகு ஒன்றைக் குறிப்பிடாமல் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவது என்பது அர்த்தமற்றதொன்றாகவே உள்ளது. 'இணைப்பு' என குறிப்பிட்டாலும் கூட, அதனை வழங்க அரசு தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதற்கு ஆதாரமாக இரண்டு உதாரணங்களைக் கூறமுடியும். முதலாவது எல்லைகளை மாற்றியமைப்பதன் மூலம் இணைப்பைத் துண்டிப்பதே அரசின் திட்டத்தின் உட்பொருள். இரண்டாவது இணைப்பை வழங்குவது அரசின் நோக்கமல்ல என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பிக்குமாருக்கு திட்டவட்டமாக உறுதியளித்துள்ளார்.

அதாவது அரசின் உத்தேசத் திட்டத்தின்படி தமிழர்களுக்கு இணைப்பும் கிடைக்கப் போவதில்லை. உரிய மாகா



படிப்பகம்

www.padippakam.com





ணங்கள் உரிய முறையில் முழுமையாகக் கிடைக்கப் போவதுமில்லை. இதனைத் தான் அரசின் உத்தியோகப் பற்றற்ற பேச்சாளர்களாகவுள்ள கூட்டணித் தலைவர்கள் வாழ்த்தி வரவேற்றுள்ளார்கள்.

அம்பாறை மாவட்டம் ஏற்கனவே பறி போய் விட்டது. அதனையிட்டு கவலைப்படத் தேவையில்லை. போகட்டும் என கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ஏற்கனவே கூறிவிட்டார். இப்போது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மணலாற்றையும் பறிப்பதே அரசின் நோக்கமாக உள்ளது. எல்லைகளை மாற்றியமைத்தல் என்ற பெயரில் மணலாறைத் தம் வசப்படுத்திக்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. மணலாறு ஏற்கனவே வெலிஓயாவாக மாற்றப்பட்டு விட்டது. சிங்களக் குடியேற்றத்துடன் பெயரும் சிங்கள மயமாகிவிட்டது.

மணலாறு தமிழ் மக்களின் இதயபூமியாகக் கருதப்படுகின்றது. இதயம் பறிபோன பின்னர் அங்கங்களால் என்ன பயன்? சிங்கள ஆட்சியாளர்கள் இதனைக் கருத்திற்கொண்டே மணலாற்றை அபகரிக்கத் திட்டமிட்டுள்ளார்கள். யுத்தம் மிகவும் மோசமான ஒரு கட்டத்துக்கு வந்துள்ள நிலையில், மணலாறை தமிழர்களின் தாயகத்திலிருந்து பிரித்தெடுப்பதை நோக்கமாக்கொண்டே எல்லைகளை மாற்றியமைக்கும் திட்டத்தை அரசாங்கம் இப்போது வெளியிட்டிருக்கிறது.

> முல்லைத் தீவு, வவுனியா, திருமலை மாவட்டங்கள் பல பகுதிகளை இழந்துவிடும்

**பதவியா குடியேற்றத்துடன் ஆரம்பமான சதித்திட்டம்**

வடபகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் பதவியாத் திட்டத்துடனேயே ஆரம்பமாகியது. ஈழக் கோரிக்கை தொடர்பாக தமிழர்கள் சிந்தித்துக் கூடப் பார்க்காத நிலையில் டி. எஸ். சேனநாயக்காவால் திட்டமிட்ட முறையில் பதவியாக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. அன்றே சிங்களத் தலைவர்கள் எங்கே கையை வைக்க வேண்டும் என்பதை நன்கு தெரிந்து கொண்டு தான் கையை வைத்துள்ளனர். இந்த பதவியாக் குடியேற்றத்தின் இரண்டாவது மூன்றாவது பரம்பரையாக வந்ததே சிங்கபுர, பராக்கிரமபுர, வெலிஓயாத் திட்டங்கள். பாரம்பரியமான தமிழ்ப் பகுதியின் இடையே - அதாவது நெஞ்சைக் குத்திக்கொடு செல்வது போல இந்தத் திட்டங்கள் மாறி -மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. நெஞ்சில் குத்திக்கொண்டுள்ள அந்த ஈட்டியை அப்படியே விட்டு விடுவதா அல்லது பிடுங்கி எறிவதா?

இந்த நிலைமையினாலயே மணலாறு இன்று ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்கின்றது. மணலாறு திட்டத்தின் ஒரு பகுதி முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குள் வருகின்றது. மற்றொரு பகுதி திருகோணமலை, அனுராதபுர மாவட்டத்துடன் இணைப்பதே அரசின் நோக்கம். இதன் மூலம் தமிழ் மாவட்டங்களான முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகியன பல பகுதிகளை இழந்து விடும்.

எல்லை மாற்றத்தின் போது இப்பகுதிகள் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட வட மத்திய மாகாணத்துடன் உள்ளடக்கப்படும். இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயமென்னவென்றால் அரசினால் உருவாக்கப்படும் வெலிஓயா மாவட்டம் நாயாறு -கொக்கிளாய் ஆகிய கடற்கரைப் பிரதேசங்களையும் தன்னுள் உள்ளடக்குவதாக இருக்கும். அனுராதபுரத்துக்கு கடல் எல்லை -கடற்கரை ஒன்று தேவை என்ற சிங்களவர்களின் விருப்பம் மட்டும் இதன் மூலம் நிறைவு செய்யப்படவில்லை. இதன் மூலமாக வடக்கு கிழக்கு இணைப்பு தெட்டத்தெளிவாக துண்டிக்கப்படும். தமிழ்ப்பகுதிகளுக்கிடையேயான தொடர்ச்சியான நிலப்பரப்பு இல்லாமல் போய் விடும். சிங்களவர்களின் நீண்டகால அபிலாஷைகள் இதன் மூலம் நிறைவு செய்யப்படும்.

**யுத்தமையமாகியுள்ள மணலாற்றுப் பகுதி**

ஈழப்போரில் தவிர்க்க முடியாத ஒரு முக்கியமான இடத்தை மணலாற்றுப் பகுதி பெறப் போகின்றது என்பதையே இந்த வரலாற்று நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இப்பகுதியில் ஐந்து பாரிய இராணுவ முகாம்களும், பெருந்தொகையான சிறிய முகாம்களும் உள்ளன. இராணுவ ரீதியில் மிகவும் பலப்படுத்தப்பட்ட ஒரு பகுதியாகவே இது உள்ளது. இங்குள்ள குடியேற்றங்களும் இராணுவ முகாம்களும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் பாதுகாப்பை வழங்கக்கூடியவையாக அமைக்கப்பட்டுள்ளன. குடியேற்றவாசிகளிலும் பெரும்பாலானோருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறியரக ஆயுதங்களும் இவர்களிடம் உள்ளன.

இப்பகுதியைச் சுற்றி


படிப்பகம்

www.padippakam.com



முழுமையாக விடுதலைப் புலிகள் உள்ளனர். கண்ணி வெடிகளும் இப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ளன. புலிகளின் காட்டுத் தலைமையகமும் ( 1-4 BASE) இதனையண்டிய பகுதியிலேயே உள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. பிரபாகரன் முக்கிய இராணுவ நடவடிக்கைகளை இந்த முகாமிலிருந்தே திட்டமிடுவதாகவும் இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. கூட்டு இராணுவத் தலைமையகம் மா. ஓயா ஆற்றுக்கு அண்மையில் உள்ளது. பிரிகேடியர் ஜானக பெரேரா வெலி ஓயா பகுதிக்குப் பொறுப்பாகவுள்ளார். கொமாண்டோப் படைப் பிரிவைச் சேர்ந்த லெப்டினன் கேர்ணல் சந்திரவன்ஸவும் இராணுவத்தில் முக்கியமானவர்.

இந்தப் பகுதியை பாதுகாப்பதற்கென இராணுவம் மேற்கொண்டுள்ள பாரிய ஏற்பாடுகள் இப் பகுதியின் கேந்திர முக்கியத்தைத் தெளிவாக உணர்ந்தே உள்ளார்கள். ஒரு சிறு மோதல் கூட இடம்பெறாமல் இப்பகுதியில் ஒரு தினம் கழிவது வெகு அருமை. இங்குள்ள ஜானகபுர இராணுவ முகாம் மிகவும் முக்கியமானது. சில வருடங்களின் பின்னர் இம்முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போது பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினார்கள். இத் தாக்குதலே "இதயபூமி -1" எனப் புலிகளால் வர்ணிக்கப்படுகின்றது. இத்தாக்குதலுக்கு இதயபூமி என அவர்கள் பெயரிட்டிருப்பது, இத் தாக்குதலுக்கு அவர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தையே உணர்த்துகின்றது. இந்தப் பகுதியிலுள்ள ஐந்து முகாம்கள் கடந்த மாதம் ஒரு நேரத்தில் புலிகளால் தாக்கப்பட்டது. ஆனால், இது எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. 120 பெண் புலிகள் உட்பட 180 புலிகள் இம்மோதலில் மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

**அச்சத்துடன் வாழும் குடியேற்றவாசிகள்**

இப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களக் கிராமவாவிகளுக்கு வேண்டியளவுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் குடியேற்றவாசிகள் அச்சத்துடனேயே வாழ்வேண்டியவர்களாக உள்ளார்கள். கொக்கிளாய், நாயாறு போன்ற மீன் பிடிக் கிராமங்களில் குடியேற்றப்பட்டவர்களில் ஒரு சிறு தொகுதியினர் அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர். அச்சம் காரணமாகவும், தொழில் செய்ய முடியாத நிலைமை காரணமாகவும் இவர்கள் வெளியேறியுள்ளனர். தற்போது நீர் கொழும்பில் தங்கியுள்ள இவர்களை மீண்டும் பழைய இடங்களில் கொண்டு சென்று குடியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து இவர்களை பதவியாவில் சகல வசதிகளுடனும் குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. அதாவது, அந்தக் குறிப்பிட்ட பகுதியை விட்டு விட அரசு தயாரில்லை.

அடம்புறாயிலிருந்து 1990




விரட்டியடிக்கப்பட்ட சிங்களவர்களுக்காகதும் பெக்புவேவாவில் அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாகல்கடை, கான்சி, உற்றுலா, பெரிய புளியங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள சிங்களவர்களும் புலிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து தமது ஜீவனோபாயத்தை இழந்துள்ளார்கள். பகல் நேரங்களில் மட்டும் தமது குடியேற்றப் பகுதிகளுக்குச் செல்லும் இவர்கள் , இரவு வேளைகளில் காடுகளிலேயே வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. "இரவு நேரத்தில் காடுகளுக்குள் இருந்தாலும், எமது தலைகளுக்கு மேலால் ஆட்டிலறி ஷெல்கள் செல்வதை அடிக்கடி எம்மால் காணமுடிகின்றது" என இவர்கள் கூறுகின்றனர்.

**குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.**

பிரிகேடியர் ஜானக பெரேரா தான் இப்பகுதியிலுள்ள இராணுவத்தினருக்கு மட்டுமன்றி, குடியேற்றவாசிகளுக்கும் பெரும் பலமாக இருந்து வருகின்றார். இப்பகுதியிலுள்ள புத்த பிக்குவான வண பிதா ஹல்மில்லவ ரட்ண தேரோவும் இதனை உறுதிப்படுத்துகின்றார். " ஜானக மறாத்தையா இங்கு வந்த பின்னரே பொதுமக்கள் தமது தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது. எமது நிலத்தை பாதுகாப்பதற்காக அவருக்கு எந்தவிதமான உதவியைச் செய்யவும் நாம் தயாராக உள்ளோம். " எனக் கூறுகின்றார் அந்தத் தேரோ. அந்தப் பகுதியைத் தமது நிலம் என தேரோ உரிமை கொண்டாடும் நிலை ஏற்பட்டு விட்டது. இதற்கு யார் காரணம்? இதனையும் விட்டுக் கொடுக்க வேண்டும் என நீலன், கூட்டணிக்கு ஆலோசனை கூறியுள்ளாரா? ■



படிப்பகம்

www.padippakam.com




# ஆகாயத்தில் பலப்பரீட்சை

□ சத்யன்

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக விமானப் படையின் விமானங்கள் மேற்கொள்ளும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தொடர்பான செய்திகளை உலக நாடுகள் கேட்டு வந்தன.

இப்போது முதல் தடவையாக படை விமானங்கள் மீது புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்பாகவும் உலகம் பரபரப்பாகவும் பேசத் தொடங்கியுள்ளது. ஈழ யுத்தத்தில் குண்டு வீச்சு விமானங்களை அறிமுகப் படுத்தியதன் மூலம் இனப் பிரச்னைக்குப் புதிய பரிமாணம் ஒன்றை சிங்கள அரசாங்கம் கொடுத்தது. இப்போது இந்த விமானப்படையை எதிர்கொள்வதற்கு ஏவுகணைகளை (?) அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம் இராணுவ சமநிலையை முற்றாகவே மாற்றி அமைத்துவிட்டடார்கள் விடுதலைப் புலிகள்.

1991 ஆம் ஆண்டில் எப்-5, எப்-7 ரக சுப்பசோனிக் ரக விமானங்களை சீனாவிடமிருந்து ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்து. நவீன தொழிநுட்ப வசதிகளைக் கொண்ட இந்த இராணுவ விமானங்களைக் கொள்வனவு செய்ததன் மூலம் தன்னுடைய ஆதிக்கத்தைப் பேணமுடியுமென்றே அரசு காட்டியது. உண்மையில் இந்த சுப்பர் சோனிக் ரக விமானங்கள் இடைமறிக்கும் விமானங்கள் (INTENCEPTENS) என்றே வகைப்படுத்தப்படுகின்றன. தாக்குதல் விமானங்கள் (GROUND ATTACK CRAFT) என வகைப்படுத்தப்படுவதில்லை.

ஆகாயத்தில் எதிர்கொள்ளப்படக்கூடிய மிரட்டல்களைக் கருத்திற் கொண்டே சுப்பர் சோனிக் ரக விமானங்களைக் கொள்வனவு செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு பரிந்துரை செய்திருந்தது.

வடபகுதி ஆகாயப்பரப்பில் அடையாளம் தெரியாத விமானங்கள் அடிக்கடி ஊடுருவுவதாகவும், இதனால் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரியளவிலான பயமுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் புலனாய்வு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்து வந்தன. முக்கியமாக ஆகாய எல்லையைக் கண்காணிக்கும் நோக்கத்துடனேயே இந்த விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அதாவது நாட்டின் ஆகாயப் பரப்பைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஒரு பாதுகாப்புத் திட்டம் (AIR DEFENCE SYSTEM) உருவாக்கப்பட்ட வேண்டும் என்பதன் முதற் கட்டமாகவே சத்தத்தை விட விரைவாகச் செல்லக்கூடிய சுப்பர்

**5000 மீட்டர் உயரத்திற்கு பறந்துகொண்டே குண்டுவீசக்கூடிய சுப்பர்சோனிக் விமானங்களே விமானப்படையின் முக்கிய சொத்து.**



படிப்பகம்

www.padippakam.com



## வடபகுதியில் பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலான குண்டுவீச்சுத் தாக்குதல்களில் இந்த விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சோனிக் விமானங்கள் வாங்கப்பட்டன. 5,000 மீட்டர் உயரத்திற்கு மேல் பறந்து கொண்டே குண்டு வீசக்கூடிய இந்த ரக விமானங்கள், விமானப்படையினரின் முக்கிய சொத்தாக இன்று கருதப்படுகின்றது. 'சியா -மாசெட்டி' மற்றும் 'புக்காரா' ரக விமானங்கள் புலிகளின் ஏவுகணைகளுக்கு அஞ்சிக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொள்ள முடியாமல் உள்ள நிலையில் 'சுப்பர்சோனிக்' ரக விமானங்களே குண்டு வீச்சை மேற்கொள்கின்றன.

**பீரங்கி விமானங்கள்**

ஆரம்பத்தில் 'எப் - 7' ரக சுப்பர் சோனிக் விமானங்களில் 7 ஐ சீனாவிடமிருந்து விமானப்படை கொள்வனவு செய்தது. இதனைப் பயன்படுத்துவது தொடர்பாக விமானப்படை விமானிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக விசேட குழு ஒன்றையும் உற்பத்தியாளர்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். நாட்டின் ஆகாய எல்லைக்குள் ஊடுருவும் எதிர் தரப்பு விமானங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய வசதிகளும் இவ் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்தன.


எனவே, அடிப்படையில் ஆகாய எல்லையைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விமானமடாகவே சுப்பர் சோனிக் காணப்பட்டது. ஆனால், யுத்த கள நிலையின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. விமானப்படையின் தொழில் நுட்பவியலாளர்களால் தரையிலுள்ள இலக்குகள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய விமானங்களாக இவை மாற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து வடபகுதியில் பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலான குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இந்த விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இலக்குகளை நோக்கிப் பதிந்து வந்து தாக்குதல் நடத்தும் 'புக்காரா', 'சியா -மாசெற்றி' ஆகிய விமானங்கள் கூட, இலக்கைச் சரியாக அடையாளம் கண்டு தாக்குதல் நடத்த முடியாதுள்ளன. இந்நிலையில் 5,000 மீட்டர் உயரத்திலிருந்து 'சுப்பர் சோனிக்' விமானத்தால் குறி பார்த்துத் தாக்குதல் நடத்த முடியாது என்பது அனைவருக்கும் புரியும். ஆனால், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துவதற்காகவும், சரமமாரியான தாக்குதல்களை மேற்கொள்வததற்காகவும் மட்டுமே இந்த விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தாலியத் தயாரிப்பு 'சியா -மாசெற்றி'' விமானங்ககளே தாக்குதல்களுக்கு முதலில் பயன்படுத்தப்பட்டன. எனினும் இதன் தாக்குதல் திறன் போதாது எனக் கருதிய அரசாங்கம், ஆர்ஜன்ரீனாவில் தயாரிக்கப்பட்ட 'புக்காரா' விமானங்களைக் கொள்வனவு செய்தது. தரைத் தாக்குதலுக்குப் பெயர் பெற்ற 'புக்காரா' விமானங்களே இராணுவ நடவடிக்கைகளுக்கு இதுவரை காலமும் பக்க பலமாக இருந்து வந்துள்ளன. ஆனால் இவற்றில் எதுவுமே பீரங்கி -பொருத்தப்பட்ட விமானங்களாக (GUNSHIP) இல்லாதது தான் விமானப் படையின் மிகப் பெரிய பலவீனமாகவுள்ளது. பீரங்கி பொருத்தப்பட்ட விமானங்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதலை முறியடிக்கக்கூடியதாக இருக்கும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நோக்கத்துக்காக பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் பலவற்றை அரசாங்கம் கொள்வனவு செய்யவுள்ளது. இதற்காக வெளிநாடொன்றில் ஏற்கனவே கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எத்தனை ஹெலிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்பது தெரியவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டுமானால் இவ்வகையான ஹெலிகள் பல அவசியம் என விமானப்படை அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே இக்கொள்வனவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஆகாயத்தில் பலப்பரீட்சை**

கடற்பரப்பில் கடற்படையினரின் நடமாட்டம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் விமானப்படையினரின் பலம் மேலும் அவசியம் என்பது உணர்த்தப்பட்டது.





படிப்பகம்

www.padippakam.com





ஆனால், இது உணர்த்தப்பட்ட அதேவேளையில் விமானங்களைச் சுட்டு வீழ்த்தக்கூடிய சக்தி தம்மிடமுள்ளதை விடுதலைப் புலிகள் உணர்த்திவிட்டார்கள்.

மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பமான பின்னர் 'அவ்ரோ' ரக இரண்டு போக்குவரத்து விமானங்களும் 'புக்காரா'ரக இரண்டு போக்குவரத்து விமானங்களும் 'புக்காரா' ரக குண்டு வீச்சு விமானமொன்றும் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

கடற்படையினரிடம் போதிய கப்பல்களோ, அல்லது அவற்றில் பொருட்களைக் கொண்டு செல்லக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகளோ இல்லாத நிலையில் விமானப்படையின் உதவியையே இதற்காக நாடவேண்டியிருந்தது. இந்நிலையில் மூன்று விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது புதிய ரக விமானங்களைக் கொள்வனவு செய்யவேண்டிய தேவையை அரசுக்கு உணர்த்தியது.

இராணுவ நடவடிக்கைகளின் போது, களத்திலுள்ள துருப்புக்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலை விமானப்படையினருக்கு ஏற்பட்டது, இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடுவோருக்கு மற்றொரு அதிர்ச்சி. விமானப்படையனிரின் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாதல் ஒரு அங்குலம் கூட முன்னேறத் தயங்கும் படையினரின் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாமல் ஒரு அங்குலம் கூட முன்னேறத் தயங்கும் படையினரின் மனோநிலையில் இது பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்தியது.

இதனை விட மென்ரக (MICRO LIGHT) விமானங்கள் சிலவற்றையும் கிளடியர் ரக விமானங்களையும் விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளார்கள் என்ற செய்தி, கொழும்பில் 'அலரி மாளிகை' உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து இடங்களிலும் விமான எதிர்ப்புக் கருவிகளை முளைக்கச் செய்துள்ளது. அலரி மாளிகையில் 'ராடர்' ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.

இவை அனைத்து ஒரு முக்கியமான செய்தியை எமக்கு உணர்த்துகின்றன. தரையிலும், கடலிலும் மட்டுமன்றி ஆகாயப் பரப்பில் கூட இரண்டு தரப்பினருக்கும் இடையேயான பலப்பரீட்சை ஆரம்பமாகிவிட்

புலிகள் எவ்வகையான ஏவுகணைகளைப் பயன்படுத்தினார்கள் என்பது தெரியாமல அதற்கு எதிரான உபாயங்களை கையாள்வது சிரமானதாகவே அரசுக்கு இருக்கிறது.

# உக்ரெய்னிலிருந்து வந்த 'ஏவுகணை' விமானங்கள்

புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் அதிர்ச்சியடைந்திருந்த படையினருக்கு உற்சாகமளிப்பது போல் வந்துள்ளது 'அன்ரனோவ் ஏ. என். 32 பி' ரக (ANTANAU AN -32B) விமானங்கள். யாழ்ப்பாணத்தில் 'முன்னேற்றப் பாய்ச்சல்' நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தபோது இந்த ரக மூன்று விமானங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கின. அரை மணி நேர இடைவெளியில் இந்த மூன்று விமானங்களும் வந்திறங்கியபோது அதனைப் பார்த்துக்கொண்டிருந்த விமானப்படை அதிகாரிகள் 'இனி அசைக்க முடியாது' என்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர்.

இந்த மூன்று விமானங்களும் வந்துசேரும் திகதியை அடிப்படையாக வைத்தே 'முன்னேற்றப் பாய்ச்சல்' நடவடிக்கை திட்டமிடப்பட்டது. இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள 'வெற்றிடத்தை' நிரப்பும் நோக்கத்துடனேயே இவ்விமானங்கள் வாங்கப்பட்டன. உக்ரேனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த மூன்று விமானங்களும் 30, 000 அடி உயரத்தில் பறக்கக் கூடியவை. ஆறு தொன் எடையுள்ள பொருட்களை அல்லது 60 படையினரைக் கொண்டு செல்லக்கூடியவை இந்த விமானங்கள். இதனை விட இராணுவ வாகனங்களைக் கூட இதில் கொண்டு செல்ல முடியும்.

**மலிவான விலையில்**

உக்ரேனிய அரசிடமிருந்து மிகவும் மலிவான விலைக்கே இவை



படிப்பகம்

www.padippakam.com



டது என்பதே அது.

புலிகள் மூன்று விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ள போதிலும் எவ்வாறான ஏவுகணையை அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை அரசால் இதுவரையில் அறிந்து கொள்ள முடியவில்லை. ரஷ்ய தயாரிப்பு 'சாம்' ரக ஏவுகணையா அல்லது அமெரிக்கத் தயாரிப்பு 'ஸ்ரிங்கர்' ரக ஏவுகணையா புலிகளிடம் உள்ளது என்பது எவருக்கும் தெரியவில்லை. இதனை விட சுவிஸ் தயாரிப்பு 'ஒக்ஸியம்' ரக ஏவுகணையை புலிகள் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் இராணுவத்தில் ஒரு தரப்பினர் கருதுகின்றார்கள்.

புலிகள் எவ்வகையான ஏவுகணையைப் பயன்படுத்தினார்கள் என்பது தெரியாமல் அதற்கு எதிரான உபாயங்களை கையாள்வது சிரமமான தாகவே இருக்கும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் விரைவில் தம்முடைய விமானப்படையைப் பெற்றுவிடுவார்கள் என சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் குறிப்பிட்டிருக்கின்றார். இது ஆகாயத்தில் நடைபெறப் போகும் பலப்பரீட்சையையே உணர்த்துகின்றது.

**தாக்கி அழிக்கத் திட்டம்**

விடுதலைப் புலிகளின் விமானப்படையை உருவாக்கும் பணியில் சங்கர் எனப்படும் சொர்ணலிங்கமே முக்கிய பங்காற்றியுள்ளதாகப் புலனாய்வு வட்டாரங்கள் சந்திரிகா அரசுக்குத் தெரிவித்துள்ளன. கனடியப் பல்கலைக்கழகமொன்றில் படித்த இவர் ஒரு இரட்டைப் பொறியியலாளர், அதாவது 'டபிள் இன்ஜினியர் விமானத் தொழில் நுட்பத்தைக் கரைத்துக் குடித்த இவர் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவர். இவருடைய ஏற்பாட்டிலேயே சில இளைஞர்களுக்கு மேற்கு நாடுகளில் விமானமோட்டிப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளதாம்.

புலிகளின் விமானப்படைத் தளமொன்று இரணைமடுப் பகுதியில் அரசின் விமானப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக விமானப்படையினர் தலைமைப் பீடத்துக்கும் அறிவித்திருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதியைக் குண்டு வீசித் தகர்க்குமாறு விமானப்படையினரிடம் கேட்கப்பட்டது. ஆனால் விமான ஓடுபாதை போன்றவற்றைக் குண்டு வீசித் தகர்க்கக்கூடிய சக்தி தம்மிடமில்லை என்பதை விமானப் படையினர் தெரிவித்திருக்கின்றார்கள். இருந்த போதிலும் இதனைத் தகர்க்கும் திட்டத்தை படையினர் கைவிட்டிருப்பார்கள் என நம்ப முடியாது.

> புலிகளின் விமான ஓடுபாதையைத் தகர்க்கக்கூடிய சக்தி தம்மிடம் இல்லை என விமானப்படை தெரிவித்துள்ளது

கிடைத்துள்ளன. இந்த மூன்று விமானங்களுக்காகவும் 13.5 மில்லியன் அமெரிக்க டாலர்களையே சுமார் ( 53 கோடி ரூபா) உக்ரேன் கோரியது. இதேயளவு தரமான விமானமொன்றை 20 மில்லியன் அமெரிக்க டொலர் (100 கோடி ரூபா)க்குக் குறைவாக இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாது என விமானப்படை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுக்கள் ஏப்ரல் 23 ஆம் திகதியே ஆரம்பமாகியது. சிரேஷ்ட விமானப்படை அதிகாரிகள் ஐந்து பேர் உக்ரேனில் விமானக்கம்பனி அதிகாரிகளுடன் இது தொடர்பான பேச்சு வார்த்தைகளை அன்று ஆரம்பித்தனர். இவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், ரெண்டர் நடைமுறைகள் மூலமாக இவற்றைக் கொள்வனவு செய்ய



முடிவெடுக்கப்பட்டது. ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் இவ்விமானங்கள் வந்தடைந்த மறுநாள் வந்து சேர்ந்தன.

**உக்ரேனிய விமானிகள்**

இந்த விமானங்கள் உக்ரேனிலிருந்து வந்தபோது சில விமானிகளும் அதனுடன் வந்துள்ளார்கள். விமான உற்பத்தி நிறுவனத்தில் பிரதிப் பணிப்பாளர் மொறிஸ் ஸறோக்கோ தலைமையிலேயே இக்குழு இலங்கை வந்தது. இவர்கள் விமானத்திலிருந்து இலங்கை மண்ணில் இறங்கியபோது பதற்றத்துடன் காணப்பட்டனர். சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள அரசுக்கு எதிரான பிரச்சாரங்களின் காரணமாகவே அவர்கள் பதற்றமடைந்திருக்கவேண்டும் என விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விமானங்களுக்குத் தேவையான மேலதிக பாகங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. வெளிநாடொன்றில் பயிற்சி பெற்ற இலங்கை விமானிகள் இந்த விமானங்களைச் செலுத்துவார்கள். ஆனால் இந்த விமானங்களில் அவர்கள் பழக்கப்படும் வரையில், உக்ரேனிய விமானிகளே விமானங்களைச் செலுத்தவுள்ளார்கள். ■

மறுபக்கத்தில் இலங்கை மற்றும் இந்திய விமானக் கட்டுப்பாட்டாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவொன்றை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஆகாய எல்லைக்குள் பிரவேசிக்கும் அடையாளம் தெரியாத விமானங்களின் விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என இவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதற்காக 'மைக்றோ - லைட்' விமானங்கள் பற்றிய விபரங்களுக்கு அவற்றின் புகைப்படங்களும் நாடு முழுவதிலும் உள்ள பாதுகாப்பு நிலையங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புலிகளின் 'மைக்றோ -லைட்' விமானங்களை இலகுவான முறையில் அடையாளம் கண்டு விட முடியும் என பாதுகாப்புத் தரப்பினர் உறுதியாக நம்புகின்றார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com


# ARM ESTATES

## RESIDENTIAL LETTINGS & MANAGEMENT

**770B London Road, Thornton Heath Pond, Thornton Heath, Surrey, CR7 6JB**

Tel: 0181-664 8800 / 0181-763 2221

Fax: 0181-763 2220

We at ARM ASSOCIATES are pleased to announce our new service in property management.

We have looked after your financial and insurance needs successfully for the past two decades and now our reliable and confidential services have been extended to provide you with our unique services in property management.

We are here to help you with all your property needs whenever, wherever and however you please.

## WANTED : FLATS & HOUSES TO LET

Please contact P. SRINIVASAN

Personal • Investment • Authority

ARM ASSOCIATES

# TEL : 0181-664 8800




படிப்பகம்

www.padippakam.com



# ஜனரஞ்சக 'வியாபாரம்'

## கொழும்புத் தமிழ்க்குழுக்கள் "ஜனரஞ்சக"பத்திரிகைகளை வெளியிட்டு புதிய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இனப்பிரச்னை தீவிரமடையும் அதேவேளையில் பத்திரிகைத் துறையிலும் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது. சிங்களப் பத்திரிகைத் துறையில் ஏற்பட்ட போட்டி பல சிறிய பத்திரிகைகள் (ப்லொயிட்) வெளிவரக் காரணமாகியது. இது தமிழ் , ஆங்கிலம் பத்திரிகைத் துறைக்ளுக்கும் இப்போது பரவி வருகின்றது.

இவ்விடயத்தில் கடைசியாகக் கிடைத்த செய்தி என்னவென்றால் 'வீரகேசரி'யை வெளியிடும் 'எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ்' நிறுவனம் ஆங்கில வார இதழ் ஒன்றை வெளியிடவுள்ளது. 'வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் வெளியாகவுள்ள இப்பத்திரிகை வெகு விரைவில் வெளியாகவுள்ளது.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை வெளியிடவேண்டும் என்ற திட்டம் நீண்டகாலமாகவே, எக்ஸ்பிரஸ் நிறுவனத்திடம் இருந்த போதிலும் இப்போது தான் அது சாத்தியமாகின்றது. தமிழர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஆங்கிலப் பத்திரிகைக்குள்ள வெற்றிடத்தை நிரப்பும் நோக்குடனேயே இவ்வாறான பத்திரிகையொன்றை வெளியிடுவது தொடர்பாக திட்டமிடப் பட்டது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஏனைய ஆங்கில்ப் பத்திரிகைகள் அனைத்தும் இனப்பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒரு தலைப்பட்சமானவையாகவே உள்ளன. சிங்கள அபிப்பிராயங்களைப் பிரதிபலிப்பவையாகவே அவை அமைந்துள்ளன. தமிழ் அபிப்பிராயத்தை அவை பிரதிபலிப்பதில்லை. இதனால் தமிழர்களுடைய அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அவசியம் என கொழும்பு வர்த்தக வட்டாரங்களிலும், புத்திஜீவிகள் மட்டத்திலும் வலியுறுத்தப் பட்டது.




இதனைத் தொடர்ந்தே இந்திய -சார்பு வர்த்தகப் புள்ளிகளைக் பங்காளிகளாகக் கொண்டுள்ள "வீரகேசரி" நிறுவனம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை வெளியிட முடிவெடுத்தது. இவ்வகையில் தமிழர் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாவது தேசிய ஆங்கிலப் பத்திரிகையாக "வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்" இருக்கப் போகிறது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமுள்ள தமிழ் வர்த்தக சமூகத்தின் முழுமையான ஆதரவு கிடைத்தால் வர்த்தக ரீதியில் இப்பத்திரிகை பெருவெற்றி பெறும் என வெளியீட்டாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளையில் இப்பத்திரிகையின் ஆசிரியராக தமிழர் அல்லாத ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். 'ஹொங் ஹொங் ரைம்ஸ்' பத்திரிகையைச் சேர்ந்த ரொஸாரியோ என்பவரே பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையிலும் கடமையாற்றியுள்ளார்.

இதனை விட இப்பத்திரிகையின் ஆசிரியர் பகுதிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் சிங்களவர்களே. இணை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பெண்மணி, ஈழப்பிரச்னை பற்றி எதுவுமே தெரியாதவர். இந்நிலையில் 'வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்' தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை எவ்வாறு பிரதிபலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

**தமிழ்ப்பத்திரிகைகள்**

மறுப்பக்கத்தில் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கென தனித்தனியான பத்திரிகைகளை வெளியிடுவதில் போட்டி போட்டுக் கொண்டுள்ளன. ஈ. பி. - டி. பி. 'தினமுரசு' என்ற வாராந்தப் பத்திரிகையை கட்சிப் பத்திரிகையாக அல்லாமல் ஜனரஞ்சகப் பத்திரிகையாக . வெளியிட்டு வருவது தெரிந்ததே. இதன் மூலம் தனக்குப் பிடிக்காதவர்கள் மீது மறைமுகமான பிரசாரத்தை ஈ. பி. டி. பி. மேற்கொண்டு வருகின்

தமிழர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய ஆங்கிலப்பத்திரிகை ஒன்றை வெளியிடவுள்ள வீரகேசரி நிறுவனம் அதன் ஆசிரியராக தமிழரல்லாத ஒருவரை நியமித்திருக்கிறது



படிப்பகம்

www.padippakam.com

**கூட்டணியினருக்கு "பேப்பர் பிஸினஸ்" செய்ய அவர்களுக்கு நேரமில்லை. அந்தளவிற்கு அரசியல் "பிஸினஸில்" அவர்கள் படுபிஸியாக இருக்கிறார்கள்.**

**புளொட்டும் வியாபாரத்தில் இறங்க முயற்சிக்கிறது.**

றது.

இத்துறையில் ஈ. பி. டி. - பி. பெற்றுள்ள வெற்றி, ஏனைய குழுக்களையும் "நாமும் இதே போல செய்தால் என்ன" எனச் சிந்திக்க வைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 'ரெலோ' இயக்கம் "தாய் நாடு" என்ற பத்திரிகையைக் கொழும்பிலிருந்து வெளியிட ஆரம்பித்துள்ளது. "தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக் குரல்" என்ற மகுடத்துடன் இரு வாரங்களுக்கு ஒருமுறை வெளியாகும் இப்பத்திரிகையும் முழுமையாக ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகையாகவே வெளியாகின்றது.

ஆனால் மறைமுக அரசியல் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன.

இதனை விட முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவாக 'சங்கமம்' என்ற பத்திரிகை ஒன்று வெளிவரத் தொடங்கியுள்ளது. இதுவும் இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளியாவதுடன், ஜனரஞ்சகப் பாணியிலேயே வெளியிடப்படுகின்றது.

தமது அமைப்புக்களின் பெயர்களைப் பயன்படுத்தினால் மக்களை அணுகமுடியாது என்பதால் தான், ஜனரஞ்சகப் பத்திரிகைகளை பல மில்லியன் செலவில் வெளியிட இவ் அமைப்புக்கள் முன் வந்துள்ளன. ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்புக்குத் தான் இந்தத் தந்திரம் தெரியவில்லை. தமது "புதிய கண்ணோட்டம்" இதழில் அலுத்துப் போன தத்துவங்களை வெளியிட்டுக் கொண்டுள்ளார்கள்.

"புளொட்" இயக்கத்தினரும் வவுனியாவிலிருந்து மாதாந்தப் பத்திரிகை ஒன்றை வெளியிட்டனர். அது "இயக்கப் பத்திரிகை"யாக வந்ததால் வாங்க எவருமின்றி நின்றுவிட்டது. இப்போது ஜனரஞ்சகமாக ஒரு பத்திரிகையை நாமும் வெளியிட்டால் என்ன எனப் "புளொட்" அமைப்பினர் ஆலோசனை நடத்துவதாகக் கேள்வி.

கூட்டணியினரைப் பொறுத்தவரை "பேப்பர் பிஸ்னஸ்" செய்ய அவர்களுக்கு நேரமில்லை. அந்தளவிற்கு அரசியல் பிஸ்னஸில் அவர்கள் படுபிஸியாகவுள்ளார்கள்.

இதேவேளையில் நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட "சூடாமணி" வார இதழ் வெளிவரத் தொடங்கியுள்ளது. 5 வருடங்களின் முன் நிறுத்தப்பட்ட "சிந்தாமணியின்" ஆசிரியர் குழுவினரே இதனையும் வெளியிடுகின்றனர். பழுத்த பத்திரிகையாளர் எஸ். டி. சிவநாயகம் தான் பிரதம ஆசிரியர். அதே சிந்தாமணி பாணியில் வெளியாகும் 'சூடாமணி 'அளவில் சிறியது (ரப்லொயிட்) என்பது தான் ஒரு வித்தியாசம். ■


# LONDON INSTITUTE OF FINANCIAL ACCOUNTING AND COMPUTING

(Affiliated to London Academy of Computing Electronic)

INDIVIDUAL COMPUTER TRAINING OPPORTUNITIES AVAILABLE FOR PROFESSIONAL AND NON PROFESSIONALS (EVENINGS & WEEKENDS)

☆ ACCOUNTING ☆
☆ DATABASE ☆
DESK TOP PUBLISHING
★ INTERNET ★
PROGRAMMING
☆ SPREADSHEETS ☆
WORD PROCESSING

Part time & weekend Accounting courses & book keeping (CIMA, ACCA & IAB)

Private classes offered GCSE & A-Level in most subjects

★ Children 8 - 11 years ★

private school entrance coaching
English as a foreign language

58A UPPER TOOTING ROAD
LONDON SW17 7PB
TEL: 0181-767 8274
FAX: 0181-672 8580

LONDON COLLEGE OF FINANCE & MANAGEMENT LTD




படிப்பகம்

www.padippakam.com





# சாம்பலான வரலாறு

## சிங்கள இனவெறியின் கோரப் பசிக்கு சாம்பலாகி வரலாற்றுப் பதிவினைப் பெற்ற யாழ்ப்பாண பொது நூலகம்.

□ கலாநிதி வே. இ. பாக்கியநாதன்

ஒரு சமூகத்தினை அழித்தொழிக்க வேண்டுமாயின் முதலில் அவர்களது அறிவுப் பொக்கிஷங்களை முற்றாக அழிக்கவேண்டும் என்றொரு அறிஞர் கூறிய கூற்று யாழ்ப்பாணப் பொதுநூலகத்தைப் பொறுத்தமட்டில் மிகப் பொருத்தமாகும். 1981 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் அறிவுச் சுரங்கமான யாழ்ப்பாணப் பொதுநூலகம் இரக்க சிந்தனையற்ற அறிவிலிகளினால் தீயிடப்பட்டு அங்கிருந்த பெறுமதி வாய்ந்த நூல்களும், தளபாடங்களும் சாம்பரான விடயம் வரலாறாகிவிட்டது. இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள பௌத்த மதவாதிகளினால் மூளைவளம் படைத்த யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பாரிய இன்னல்களில் இதுவும் ஒன்றாகும். புண் ஆறினாலும் அதனால் ஏற்பட்ட வடு மாறாது என்பது போல் இந்நிகழ்வு ஈழத்தமிழ் மக்கள் மனதை விட்டு மறக்கமுடியாத, - ஏற்க முடியாத ஒரு சம்பவமாக இருந்து வருகிறது.

யாழ்ப்பாண பொது நூலக ஆரம்ப கால வரலாற்றினை , அதன் வளாச்சிப் போக்கினைப் பற்றி அனைவரும் தெரிந்திருக்க மாட்டார்கள். தெரிந்திருக்க வேண்டிய நியாயமும் கற்பிக்க முடியாது.

நூலகம் எரிவதற்கு முன்பும், அதன் பின்பும் அந்நூலகத்தின் பிரதம நூலகராகச் சேவையாற்றக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தமையினால் அந்நூலகத்தின் வரலாற்றுப் பின்னணியினை, அதன் துரித வளர்ச்சியினை, அதன் வளர்ச்சிக்காக உழைத்த பெருமக்களை அறிய முடிந்தது. இவர்களின் பாரிய பங்களிப்பினை ஏனையோரும் அறிந்திருக்கவேண்



படிப்பகம்

www.padippakam.com





டும் என்பதால் இச்சிறுகட்டு ரையை எழுதலானேன்.

**வரலாற்றுப் பின்னணி**

எந்த ஒரு நிறுவனமும் தனியொருவரினது அபிலாஷையின் உந்துதலினால் ஏற்படுவது கண்கூடு. யாழ்ப்பாண பொது நூலகமும் இவ்வாறு தான் உருவானது.

அச்சுவேலி வாசியான திரு. க. மு. செல்லப்பா யாழ்ப்பாண பெரிய நீதிமன்றத்தின் காரியதரிசியாக இருந்தவர். யாழ்ப்பாணத்துக்கென ஒரு இலவச மத்திய வாசிகசாலைச் சங்கம் இருக்க வேண்டும் என்ற பெருவிருப்புக்கொண்டு 1934 ஆம் ஆண்டு ஆனி மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கூட்டமொன்றைக் கூட்டினார். இக் கூட்டத்தில் அப்பொழுது யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. சி. குமாரசுவாமி அதிவண, கலாநிதி ஐசாக் தம்பையா, சட்டத்தரணி சி. பொன்னம்பலம், க. மு. செல்லப்பா மற்றும் பல பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர். இதில் மேற்குறிப்பிட்டவர்கள் முறையே தலைவராகவும், உபதலைவராகவும், இணைச் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் ஆரம்ப கால நடவடிக்கையின் பெறுபேறாக பல நூல்கள் அன்பளிப்பாகவும் பணம் கொடுத்தும் கொள்வனவு செய்யப்பட்டன. மத்திய இலவச வாசிகசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நூலகம் 01. 08. 1934 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வீதியில் அமைந்ததோர் சிறிய அறையில் இயங்கி வந்தது. திரு. சி. எஸ். இராசரெத்தினம் என்பவர் இதன் முதல் நூலக மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் திரு. ஆர். ஆர். நல்லையா யாழ்ப்பாண நகரசபைத் தலைவராக இருந்த காலத்தில் இந்நூலகத்தை 01. 01. 1935 ஆம் ஆண்டு நகரசபைப் பொறுப்பில் ஏற்றார்.

நூலகம் வளர இடப் பிரச்னை தோன்றியது. இதற்கென பிரேத்தியேகமான இடம் ஒன்று அமைக்கப்படவேண்டிய அவசியம் உணரப்பட்டது. இதற்கு உருவகம் அளித்தவர் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வராக இருந்த சாம் ஏ. சபாபதி அவர்களே. தமிழர் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் அளவில் பாரிய நூலகம் அமைதல் வேண்டும். அது பரந்த நிலப் பரப்பில் இருக்கவேண்டும். அது யாழ்ப்பாண மக்களுக்கு மாத்திரமன்றி இலங்கை முழுவதற்குமே பயன் தரும் அளவில் பாரிய அளவில் இயங்க வேண்டும் என்பது அவர் கண்ட கனவு. அவர் கனவைப் பலர் நனவாக்க முனைந்தனர். யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபராகவிருந்த

**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வீதியில் சிறிய அறை ஒன்றில் 1934ல் இயங்க ஆரம்பித்த மத்திய இலவச வாசிகசாலை பின்னர் ஆசியாவிலேயே பெரிய பொது நூலகமாக வளர்ந்தது**

முதல்வர் வண. லோங் தந்தையார்கள் முன்னணியில் குறிப்பிடப்பட வேண்டியவர். இவருக்கு தோன்றாத் துணையாக இருந்தவர் காரியாதிகாரி ரி. முருகேசபிள்ளையவர்கள். அவர் பதவி வழியினூடாக பல்வகை நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தார்.

நூலகத்தைக் கட்டுவதற்குத் தேவையான நிதியினைக் களியாட்ட விழா, அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலம் திரட்டுவதென தீர்மானிக்கப்பட்டு 1952 ஆம ஆண்டில் மத்திய நூல் நிலையச் சபையொன்று நிறுவப்பட்டது. இதன் தலைவராக நகர பிதா சாம் சபாபதியும் லோங் சுவாமிகளும் தெரிவு செய்யப்பட்டனர். "நாங்கள் அமைக்கப் போகும் நூல் நிலையம் தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஒளியூட்டும் தரமுள்ளதாகும்" என வண பிதா லோங் பெருந்தன்மையோடு அன்று கூறினார். ஒளியூட்டுவதற்குப் பதிலாக எரியூட்டப்படும் என்பதை அவர் அன்று கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்.

நூலகத்தைக் கட்டுவதற்கு உகந்த இடமாக யாழ்ப்பாண முனியப்பர் கோவிலின் முன்புள்ள வெளிப்பிரதேசம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தியக் கட்டிடக் கலைஞரான சி. எம். நரசிம்மன் வெளிப்புற அமைப்பினை நிர்ணயித்தார். நூலகவியிலின் தந்தையென அழைக்கப்படும் கலாநிதி இரங்கநாதன் நூலக உட்புற அமைப்புக்களை நிர்ணயித்து மாநகர சபைக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தார். இவர்களின் அறிவுரைகளுக்கேற்பவே நூலகக் கட்டடம் அமையலாயிற்று.


ஐந்தெண்ணில் நம்பிக்கை கொண்ட தமிழர், ஐவரை நூலகக் கட்டிட அத்திவாரமிட தெரிவு செய்தனர். இது 1954 ஆம்



படிப்பகம்

www.padippakam.com





ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற இவ்வைபவத்தில் சாம் . சபாபதி, வண. பிதா லோங், பிரித்தானிய தூதுவர், அமெரிக்க தூதுவர், இந்திய தூதுவராலய முதல்வர் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். அமெரிக்கத் தூதுவர் ரூபா104, 000 த்தை அன்பளிப்பாக கொடுத்தார். அல்பிரட் துரையப்பா ஒரு திறமையான நகரபிதா என்பது யாவரும் அறிந்த உண்மை. அவர் நகர பிதாவாக வந்ததும் பல்வேறு துரித நடவடிக்கைகளைக் கையாண்டார். இவரது செயலாண்மையினாற்றான் நூலகம் அரைகுறையாக கட்டப்பட்ட நிலையிலும் புதிய கட்டிடத்திற்கு கொண்டு வரப்பட்டு அவரினால் 11. 10. 1959 இல் திறக்கப்பட்டது.

**நூலகத்தின் துரித வளர்ச்சி**

நூலகம் வளரும் தன்மை கொண்டது என்பது கலாநிதி இரங்கநாதனின் பஞ்ச சீலக் கொள்கைகளுள் ஒன்றாகும். நூலகமொன்றின் சேர்க்கையின் தரமே நூலகத்தை உயர்த்துவதேயன்றி அங்குள்ள நூல்களின் எண்ணிக்கையல்ல. இதன்படி பார்த்தால் யாழ்ப்பாண பொது நூலகம் இலங்கையில் வேறு எங்கும் காணாத தரமான நூற்சேர்க்கையைக் கொண்டிருந்தது எனலாம். கிடைத்தற்கரிய நூல்களை மாநகரசபை கொள்வனவு செய்ததுடன் பலரது சேர்க்கைகளையும் . அன்பளிப்பாகப் பெற்றது. முதலியார் குல சபாநாதன், கோப்பாய்க் கோமகன், வன்னியசிங்கம், டாக்டர் ஐசாக் தம்மையா, மலேசியா துரைராசசிங்கம், இரச ஐயனார் ஆகியோரது சேர்க்கைகள் பெருமை தரவல்லன.

அமெரிக்காவில் நூலகவியல் முதுமானிப்பட்டம் பெற்று நாடு திரும்பிய எனக்கு யாழ்ப்பாண பொதுசன நூலகப் பிரதம -நூலகர் பதவி கிடைத்தது பெருமகிழ்வைக் கொடுத்தது. நான் கற்ற கல்வியையும் அனுபவத்தையும் தமிழ் மக்களுக்காக , அதுவும் எமது யாழ்ப்பாண மக்களுக்காகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைத்ததே என்பது தான் என் மகிழ்ச்சிக்குரிய காரணம்.

கட்டடக் கலைஞரின் மாதிரிப் படத் திற்கமைய முதற் கட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என அப்பொழுது நகர பிதாவாகவிருந்த சு. செ. மகாதேவாவைக் கேட்டபொழுது அவர் இதற்கு இணக்கம் தெரிவித்தார்.

> உடமைகளை அழிக்கலாம் ஆனால் தமிழர்களின் உள்ளத் திண்மையை அழிக்கமுடியாது என்பதற்குச் சான்றாக இன்று பொது நூலகம் ஏழு கிளைகளுடன் தழைத்து வளர்ந்து வருகிறது

இதற்கிடையில் மாநகரசபை கலைக்கப்பட்டு உள்ளூராட்சி மந்திரியாயிருந்த திரு. மு. திருச்செல்வம், திரு. சி. சி. மாணிக்கவாசகர், திரு. என். நடேசன் ஆகிய இரு திறமை வாய்ந்த விசேட ஆணையாளர்களை நகர சபை நிர்வாகத்தை நடாத்த நியமித்தார். இது நூலகக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கப் பெருவாய்ப்பாக அமைந்தது. நிறைவேற்றுப் பொறியியலாளரான நடேசன் தாமே முன்னின்று இரவு பகலாக முதல் மாடிக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க முயன்றார். இவரே இன்று முற்று முழுவதாக கட்டி முடிக்கப்பட்ட நூலகத்தையும் கட்டி முடித்தவர். இவருடன்



மாநகர சபைப் பொறியியலாளரான இ. வைத்திலிங்கமும் இணைந்து செயற்பட்டார். திராவிடச் சிற்பக் கலையம்சங்களுடன் முடிந்த இரு மாடித் தளங்களிலும் நூலகத்தில் பல்வேறு பகுதிகள் செயற்பட்டன. அங்கு கடமை புரிந்த நான்காண்டுகளில் யான் பலவித முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டேன். நூல்களை இரவல் எடுத்துச் செல்லும் முறையில் பிறவுஸி முறை அமுலாக்கம் செய்தமை, யாழ்ப்பாணத்தைப் பிரதிபலிப்பதற்காக 'யாழ்' போன்ற அமைப்பில் உள்ள யன்னல்களைச் செய்வித்தமை, குழந்தைகள் நூலகத்தைப் பொதுநூலகத்துடன் இணைத்தமை, சரஸ்வதி சிலையமைத்தமை, நவீன தளபாடங்களைச் செய்து உசாத்துணைப் பகுதியை நவீனமயப்படுத்தியமை, சேர். வை. துரைச்சாமியவர்களின் பாராளுமன்ற அறிக்கைளை நூலகத்துக்குப் பெற்றமை, திருமதி. புனிதவதி திருச்செல்வதித்தின்து உதவியுடன் மருத்துவம், சோதிடம் சார்பான பனையோலைச் சுவடிகளைச் சேகரித்தமை இவற்றுள் சிலவாகும்.

இன்று எரியுண்ட நூலகத்தில் இத்தேடக் கிடைத்தற்கரிய சேர்க்கைகள் அழிந்து போயின. கட்டிடங்களைக் கட்டியெழுப்பலாம். ஆனால் இவ்வரிய சேர்க்கைகளை மீளப் பெறமுடியுமோ என்பது தான் வினா.

உடமைகளை அழிக்கலாம். ஆனால் தமிழர்களினது உள்ளத் திண்மையை எவராலும் அழிக்க முடியாது என்பதற்குச் சான்றாக இன்று யாழ். பொதுநூலகம் ஏழு கிளைகளுடன் தழைத்து வளர்ந்து வருகிறது. இதனைத் தற்போதைய மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செவ்வனே செயற்பட ஆவன செய்கிறார். அவர் போற்றப்பட வேண்டியவர், உற்சாகப் படுத்தப்பட வேண்டியவர். இவை தமிழ் மக்களாகிய எமது கையில் உள்ளது என்பதை மட்டும் கூறி வைக்க விழைகிறேன். ■



படிப்பகம்

www.padippakam.com



பற்கள் ஈறுகள்
சம்பந்தமான
சகல தடுப்பு முறை
சிகிச்சைகள்

**COSMETIC
DENTAL
TREATMENT**

இருபது வயதுக்கு
மேற்பட்டவர்க்கு
கம்பிகள் மூலம்
பற்களை ஒழுங்காக்கல்
(ORTHODONTIC TREATMENT)

நாட்பட்ட பற்சுற்று
இழைய அழற்சிக்கான
சிகிச்சை
(PERIODONTAL TREATMENT)

**RESTORATIVE & PROSTHETIC
DENTAL TREATMENT**

*தமிழில் தொடர்பு கொள்பவர்கள் புதன், வியாழன், வெள்ளி,*
**9AM - 5PM 0181 472 9429** இல் ஆலோசனை பெறவும்.

*David V. Palanivel*

**127, GREENGATE STREET,
PLAISTOW, LONDON E13 OBG**

**TEL: 081-472 9429**



படிப்பகம்

www.padippakam.com



# சமாதானத்துக்கு 'குண்டு'



☐ விமல் சொக்கநாதன்

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் பல்கலைக் கழக வளாகம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நூற்றுக்கணக்கானோரை காயப்படுத்தியிருக்கிறது. வெளிநாட்டவர் ஒருவர் உட்பட பலர் உயிரிழந்திருக்கிறார்கள். பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் நைந்துவிடும் நிலையில் உள்ள உறவுகள், ஆட்டம் கண்டிருக்கின்றன.

இரு தரப்பிலும் பலத்த எதிர்ப்புக்களுக்கிடையில் மிகப் பக்குவமாக உருவாக்கப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் கேள்விக்குறி ஆகி இருக்கின்றன.



ஜெருசலேம் நகரில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் அரபாத்தின் சமாதான உடன்படிக்கையை சிதைப்பதே நோக்கம்

தற்கொலைக் குண்டைத் தாங்கிச் சென்று வெடித்தவள் ஒரு பெண்! ஹமாஸ் என்ற பயங்கரவாத இயக்கத்தின் இராணுவ அணியில் முக்கிய பொறுப்பு ஏற்றுள்ள யஹ்யா ஆளா' என்பவரின் சிஷ்யை' என்று ஹமாஸ் இயக்கம் உரிமை பாராட்டியிருக்கிறது. இஸ்ரேல் நாடெங்கிலும் தேடி வரும் பயங்கரவாதிகள் பட்டியலில் மிக முதன்மையான இடத்தைப் பெறுவது யஹ்யா.

இஸ்ரேலுடன், PLO பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசார் அரபாத் செய்து கொண்ட வரலாற்று முக்கியம் மிக்க உடன்படிக்கையை சிதைப்பதே இந்த வன்மைவாத 'ஹமாஸ்' இயக்கத்தின் நோக்கமாகும். இந்த துர்நோக்கத்திற்காக ஈரான் போன்ற வெளிநாடுகளிடம் 'கூலி'வாங்கி செயற்படும் பயங்கரவாதிகள் தம் கையில் அகப்பட்டால் அவர்களின் கரங்களை தாம் துண்டித்து விடப் போவதாக அறிவித்திருக்கிறார் 'முன்னாள் பயங்கரவாதி' - யாசர் அரபாத்.

மேற்கு கரையின் எஞ்சிய பகுதிகளில் பாலஸ்தீன சுயாட்சியை ஏற்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகள் இந்த மாதிரியான குண்டுத்தாக்குதல்களினால், சலசலப்புக்களினால் கைவிடப்படமாட்டா என்று உறுதிமொழி வழங்கியிருக்கிறார் பனங்காட்டு நரி போன்ற முதுபெரும் அரசியல் வாதி -வெளியுறவு அமைச்சர் ஷிமென் பெரேஸ்.

தற்கொலைக் குண்டைத் தாங்கி வந்தது ஒரு பெண் என்பது உறுதியாக தெரிய வந்தால், தெரு வீதிகளில் இனிமேல் பாலஸ்தீனிய பெண்களும் கடுமையாக சோதிக்கப்படுவார்கள் என்று இஸ்ரேலின் பொலிஸ் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்றாம் பேர் வழிகள் இப்படி -சவால்விடுவது போல, பிரிட்டனின் வட அயர்லாந்து வட்டாரத்திலும் சில சலசலப்புக்கள் அவ்வப்போது எம் காதுகளில் வீழ்கின்றன.

வட அயர்லாந்து வட்டாரத்தில் I. R. A. இயக்கம் ஒருதலைப்பட்சமாக சண்டை நிறுத்தத்தை அறிவித்தது.

இப்போது ஒரு வருட காலம் பூர்த்தியாகிவிட்டது. 'ஒரு வருடம் வேண்டாம்..' ஒரு மாதம் நிலைத்துவிட்டால் போதுமே' என்று ஐயம் தெரிவித்து, IRA இயக்கத்தினரை நையாண்டி செய்த பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் ஆய்வாளர்கள் முகங்களில் விளக்கெண்ணெய் வடிய ஆரம்பித்திருக்கிறது.

எது எப்படியோ, அசம்பாவிதங்கள் எதுவுமே இல்லாமல் IRA இயக்கத்தின் போர் நிறுத்த பிரகடனம் வீறுநடை போட்டு வருகிறது. இதன் விளைவாக லண்டன் காவல் அதிகாரிகளின் எண்ணிக்கை 20 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

IRA பயங்கரவாதத்திலிருந்து இவர்கள் -கண்காணிப்பு அகற்றப்பட்டு, லண்டனில் அரபு பயங்கரவாதம், கால்நடைகளின் உரிமைகள் குழு, போன்ற வன்மைவாத இயக்கங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பிரிட்டனில் அறிமுகமான உரசும் லொத்தர்களால் தர்ம ஸ்தாபனங்கள் தேவாலயத்துக்கு சேரும் பணம் குறைந்து விட்டதாம்

சமாதானத்தை விரும்பும் எந்த சாதாரண மனிதனுக்கும் இது நல்ல செய்தியாக இருக்கும். ஆனால் IRA இயக்கத்திற்கு பெயரும் புகழும் கௌரவமும் சேர்ந்து விடுமோ என்ற பொறாமையில் -எரிச்சலில் -சில சில்லறைப் பயங்கரவாதிகள் -வட அயர்லாந்தில் ஆங்காங்கு தேவாலயங்களுக்கு தீ மூட்டி, வீடுகள் மீது குண்டு வீசி தமது கைவரிசைகளைக் காட்டி வருகிறார்கள்.

செப்டம்பர் நடுப்பகுதிக்கு முன் பிரிட்டனில் மழையே வரப்போவதில்லை என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள். கொதி வெய்யில் சாத



படிப்பகம்

www.padippakam.com

# SHARMILAS

**5 AMEN CORNER**
**TOOTING,**
**LONDON SW1**

- இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள்,
- மரக்கறி வகைகள்,
- ஆங்கில உணவுப் பொருட்கள்,
- மதுபான வகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
மறவாமல் நாடுங்கள்...

# ஆலயம்
## வீடியோ பிறசென்ற்

- உங்களுக்குத் தேவையான பழைய – புதிய வீடியோ படங்களை உடனுக்குடன் பெறவும்,
- தரமான ஓடியோ, சீ.டி களை நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள...

**AALAYAM**
**VIDEO PRESENT**

- இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு

**AALAYAM**
**VIDEO PRESENT**
5, Amen Corner,
Tooting
LONDON SW1

**TEL: 0181 767 3961**

# PARAM & CO SOLICITORS

SEGARAM HOUSE'
221 EDGWARE ROAD
COLINDALE
LONDON NW9

Solicitors for all your legal requirements
Civil litigation,
Wills probate,
Divorce and Family Matters,
Immigration,
Crime,
Motoring offences,
Personal injuries case

Legal Aid Cases Undertaken

S. Paramalingham BA, LLM
ASSISTANT SOLICITORS:
MISS R. KULASEGARAM
MR. THANARAJASINGHAM

**Tel: 081-200 3500**
**Fax: 081-200 1360**



படிப்பகம்

www.padippakam.com





ஈழத் தமிழ் அநாதைக் குழந்தைகளுக்காக மூன்று நிகழ்ச்சிகளை லண்டனில் வழங்கிய சுதா.

னைகளை எல்லாம் தகர்த்து வரிந்து சராசரி 63 F ல் இரவும் பகலும் பிரிட்டன் வாட்டி எடுக்கப்படுகிறது.

பிரிட்டனின் வீடுகளிலும் கார்களிலும் குளிர்காலத்தில் சூடு தரும் 'ஹீட்டர்'சாதனங்கள் மட்டுமே உள்ளன. மின்விசிறிகள் கிடையவே கிடையதே.

A. C. கேள்விப்பட்டது கூட இல்லை. ஆண்கள் சேர்ட்டுக்களை விட்டு பெண்கள் இடுப்பில் உள்ள ஆடைகளையும் கழற்றி எறிந்துவிட்டு வீதிகளை வலம் வருகிறார்கள். கடைகளில் ஐஸ்கிறீம், குளிர்பானம் போன்றவை ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாமல் காட்டு மரங்களை அழித்து காற்று மண்டலத்தில் அபாயத்தை ஏற்படுத்தினீர்களே, ? பார்த்தீர்களா? என்று சிலர் குரல் எழுப்புகிறார்கள்.

பிரிட்டன் இனியாவது தனது போக்கை மாற்ற வேண்டும். வீடுகளிலும் பணிமனைகளிலும் A. C. குளுகுளு குளிரூட்டும் சாதனம் பொருத்தப்பட வேண்டும். கூட்டம் கூட்டமாக வெளியூர் போகாமல் பிரிட்டிஷ் மக்கள் பிரிட்டனிலேயே கோடையைக் கழிக்கலாமே என்று சிலர் கருதுகிறார்கள். வெய்யிலின் உஷ்ணம் அதிகரிக்க அதிகரிக்க ஊழியர்கள் வேலைக்கு வருவதை விடுத்து வீதிகளில் அலைகிறார்கள். பெருமளவு வேலை தடைப்படுகிறது என்று முதலாளிமார் குறைப்பட்டிருக்கிறார்கள். பிரிட்டனில் கடந்த சில மாதங்களாக பிரபல்யமாகியுள்ள 'லாட்டரி மேனியா' தொற்று நோயை ஏற்படுத்தியிருப்பது தெரிந்த செய்தி. மக்களின் கையில் ஏதாவது பணம் எஞ்சியிருந்தால் வழக்கமாக அது கோவிலுக்கோ, தேவாலயத்துக்கோ அல்து தர்ம நிறுவனங்களுக்கோ செலவிடப்படுகிறது. ஆனால் இப்போதோ எஞ்சியுள்ள பணத்தையெல்லாம் பொதுமக்கள் வீணடிப்பதாக பல தர்ம நிறுவனங்களும், தேவாலயங்களும் குறைப்பட்டுள்ளன. பிரிட்டனின் மூன்று முக்கிய கட்சிகளில் ஒன்றான லிபரல் டெமோகிறற் அடுத்த மாதம் நடக்க இருக்கும் தனது வருடாந்த மாநாட்டில் இது பற்றி விவாதிக்க இருக்கிறது.

இப்போது ஒரு மில்லியன் முதல் 20 மில்லியன் வரை முதலாவது பரிசாக வழங்கப்படும் இந்த லாட்டரியில் முதற் பரிசு ஒரு மில்லியனுக்கு மேல் வழங்கக்கூடாது என்று தாம் கேட்க இருப்பதாக இந்த கட்சி அறிவித்துள்ளது. அத்தோடு INSTANT SCRATCH CARDS எனப்படும் 'திடீர்' ஆயிரங்களை வழங்கும் உரசல் அட்டைகள்' தடைசெய்யப்பட வேண்டும் என்றும் இந்த அரசியல் கட்சி கேட்க இருக்கிறது. ஒரு பவுணுக்கு ஒரு அட்டையை வாங்கி உரசிப் பார்த்தால் ஆயிரங்கள் பரிசு கிடைக்காலம் என்ற நப்பாசையில் இந்த உரசல் அட்டைகளை பிரிட்டிஷ் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கி பணத்தை உரசித் தூளாக்குகிறார்கள்.

**சாதனைகள் பல புரியும் ஒரு தர்ம நிறுவனம்**

எண்பதுகளில் இலங்கையில் ஏற்பட்ட விபரீதங்கள் பல குடும்பத் தலைவர்களை பலி கொண்டு தாய்மாரை விதவைகளாக்கி குழந்தைகளை அநாதைகளாக்கிய அந்த காலகட்டத்தில் லண்டனில் உருவானது TOT (குழந்தை) என்ற ஒரு தர்ம நிறுவனம். தமிழ் அநாதைக் குழந்தைகள் அறக்கட்டளை என்ற பெயரில் லண்டனில் இயங்கி வரும் இந்த நிறுவனம் தமிழ் பொது மக்களின் ஆதரவை பெரிதும் பெற்றுள்ள ஒரு நிறுவனமாகும்.

தமிழ் கலா ரசிகர்கள் மத்தியில் நல்ல கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும் -நேரடி -நிதி திரட்டல் மூலமும் பணம் திரட்டியுள்ள இந்த நிறுவனம் தமிழ் ஈழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அநாதை இல்லங்களுக்கு பெருமளவில் நிதி உதவி வழங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தின் நிதி திரட்டலுக்காக , தமிழ் நாட்டின் முன்னணி பாடகி ஸ்ரீமதி சுதா ரகுநாதன் அவர்கள் தன் குழுவினருடன் லண்டன் வந்து மூன்று சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்தி விட்டு திரும்பினார். 'அநாதை இயக்கமோ என்ன இயக்கமோ எனக்கு பரவாயில்லை. நான் லண்டன் வந்து நிகழ்ச்சி தர எனது ரேட் து. இத்தோடு விமான டிக்கட், ஹோட்டல், கார்வசதி, ஷாப்பிங்.. என்று ஏற்பாட்டு நிறுவனங்களை மொட்டை அடிக்க முற்படும் தமிழ்நாட்டு 'கிராக்கிகள்' குருவருளும் திருவருளும் நிறையப் பெற்ற சுதா போன்ற சிம்பிள் பாடகிகளிடம் படிக்கவேண்டியது எவ்வளவோ நிறைய இருக்கிறது.

பக்தர்கள் கண்களில் தென்பட்டாலும் தம்மை நம்பியவர்கள் வாழ்வில் இவரைப் போன்ற ஞானிகள் புரியும் விளையாட்டுக்கள் மகிமைகள் ஏராளம்.



**ஜலசமாதி கண்ட புனிதரின் ஓராண்டு நிறைவு**

"ஒரு குருவின் அருள் உனக்கு இருந்தால் உன் தலைவிதியே மாற்றப்படும் ஆண்டவனின் அருளைப் பெற யாகங்கள் , வேள்விகள் தேவையில்லை. மனமுருகி சிந்தை நெகிழ



படிப்பகம்

www.padippakam.com

அவன் பெயரை உச்சரித்து அவன் புகழைப் பாடு. நீ பாடினால் அவன் ஆடுவான். நீ ஆடினால் அவன் உன்னை அள்ளி அணைத்து அருள்மழை பொழிவான்..."

- என்றெல்லாம் இலங்கை -இந்தியா -சிங்கப்பூர்-மலேஷியா . லண்டன், சுவிஸ், அமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் தமது சிம்மக் குரலால் கர்ஜனை செய்து இறைவனின் மீது பஜனைகள் பாடி -பல்லாயிரக்கணக்கான பக்தர்களை தன்பால் கவர்ந்தவர் சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள்.

வட இந்தியாவின் -கோடீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இமாலய அடிவாரத்தில் கங்கை மாதா ருத்தி பிரவாகம் எடுத்து பாய்ந்து செல்லும் 'ருத்திர பிரயாக்' என்ற இடத்தில் அவர் ஜலசமாதி கண்டு ஓராண்டு நிறைவடைகிறது.

பக்தர்கள் கண்களில் தென்படாவிட்டாலும், தம்மை நம்பியவர்கள் வாழ்வில் இவரைப் போன்ற ஞானிகள் புரியும் விளையாட்டுக்கள் மகிமைகள் ஏராளம்.

காஞ்சிபுரத்துக்கும் வந்த வாசிக்கும் இடையே உள்ள தென்னாங்கன் என்ற புண்ணிய பூமியில் இவர் அமைத்த மாபெரும் ஆலயம், வேதப் பாடசாலை, முதியோர் விடுதி, நூல் நிலையம் ஆகியன எதிர்வரும் 1996 பெப்ரவரியில் ஆலயகும்பாபிஷேகத்துடன் செயற்பட இருக்கின்றன.

மகான்கள் மறைவதில்லை. எமது மானிடக் கண்களில் தென்படாமல் போகிறார்கள். கண்களில் தென்படாத மின்சார சக்தி எமக்கு ஒளியூட்டுவது போல, பலன்கள் பல தருவது போல, மானிடக் கண்களின் தென்படாத மகான்களின் சக்தி அவர்களை நம்பியோர் வாழ்வில் ஒளியூட்டுகிறது. பலன்கள் நன்மைகள் பலவற்றை அள்ளி வழங்குகிறது என்று தான் ஆன்மீகவாதிகள் உறுதியாக நம்புகிறார்கள்.

# இரங்கும் இல்லம்

இரங்கும் இல்லத்தின் இரண்டாவது கவிதைப் போட்டிக்கு 30. 06. - 95 வரை கவிதைகள் எழுதியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து பரிசில்கள் வழங்குவதுடன் அடுத்து மூன்றாவது போட்டிக்கான ஐந்து தலையங்கங்கள் பின்வருமாறு:

1. நண்பர், நடிப்பு, நயவஞ்சகம்.
2. கண்ணீர், கவலை, கயவர்கள்.
3. உழைப்பு, உதவி, உபத்திரவம்.
4. சந்தோஷம், சந்தேகம், சலனம்.
5. தொடங்கல், தொடர்தல், தொலைதல்.

மேற்குறிப்பிட்ட சொற்றொடர்களைக் கொண்டு பன்னிரண்டு வரிகளுக்கு குறையாமலும் பதினாறு வரிகளுக்குக் கூடாமலும் ஐந்து கவிதைகளை எழுதி 30. 09. 95க்கு முன் அனுப்புங்கள்.

31. 12. 95ல் முடிவடையும் இரங்கும் இல்லத்தின் நான்னாவது போட்டியுடன் சகல கவிதைகளும் நூலாக்கப்பட்டு 95 ஆம் ஆண்டுக்கான கவிதை நூல் வெளியிடுவதற்கு தங்கள் ஆக்கங்கள் எமக்கு உதவட்டும்.

கடிதத் தொடர்புகட்கு:
SYMPATHY HAUS,
POST BOX 750162, 60531 FRANKFURT, GERMANY.

MARKANDAN & Co
SOLICITORS & ADMINISTRATORS FOR OATHS

IMMIGRATION / HOME OFFICE

NO APPOINTMENT NECESSARY
HOME OFFICE & PORT VISITS
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK TO AND KEEN TO HELP

URDU, PUNJABI,
GUJERATI & HINDI SPOKEN
HOME VISITS ARRANGED

Thamil House,
720 Romford Road,
Manor Park, London E12 6BT

Telephone: 0181-514 8188 Fax: 0181-514 8303



படிப்பகம்

www.padippakam.com





## மணிவிழா காணும் மகாஜனன்

ஈழத்தின் புகழ் பெற்ற கல்விமான்; சிறந்த தமிழறிஞர்; சமூகசேவையாளர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபராக இருந்த பொ. கனகசபாபதி அவர்கள் இம்மாதம் (செப்டம்பர்) 4 ஆம் திகதி அறுபது வயதினை எய்துவதையொட்டி றொறன்ரோவில் மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது கனடாவில் நோர்த்யோக் கல்விச்சேவையின் பல்கலாச்சார ஆலோசகராக பணியாற்றி வருகிறார். மகாஜனாக் கல்லூரியில் தனது 21 வது வயதிலே ஆசிரிய சேவையில் சேர்ந்து கொண்டார். 1971 இல் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி அதிபராகி, பின் 1977 ல் மகாஜனாக் கல்லூரி அதிபராக சேவையைத் தொடர்ந்தார். 1981 இல் நைஜீரியா சென்று, பின் 1987 முதல் கனடாவில் குடும்பத்தாருடன் வாழ்ந்து வரும் அவருக்கு 'ஈழகேசரி' இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## கூத்துக்கு புத்துயிர்



தாளலயம் மற்றும் நாட்டுக் கூத்துக்களையும் புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களிடையே மேடையேற்றி, மறைந்து போகிற நிலையில் உள்ள அந்த உன்னத கலைக்கு உயரிய இடத்தையும், மதிப்பையும் அளித்து வருபவர்கள் சிலரை விரல் விட்டு எண்ணி விடலாம். லண்டனில் இந்த ஆண்டு மாவீரர் தினத்தில் மக்கள் வெள்ளம் நிறைந்து வழிந்து கொண்டிருக்க மேடையேறிய "மாவீரர் பண்டிதன்" என்ற நாட்டுக் கூத்தை எழுதி, பண்டிதராக நடித்த 'பாஷையூர் செபமணியர்' என்ற இளைஞர் இந்த வகையில் பாராட்டப்படவேண்டியவர். தேவகுலசூரியர் இவர் இயற்பெயர். தற்போதைய சம்பவங்களோடு கூத்துக்களாக புதிய பாணியில் தருவது சுவைக்கிறது. அண்ணாவி பரம்பரையில் வந்த இவரது தற்போதைய படைப்பு: 'இந்திரன் சபையில்' என்ற தெருக்கூத்து.

## வயலின் + வாய்ப்பாட்டு

'குட்டித் தமிழீழம்' என்ற கனடாவின் றொறன்ரோவில் கொடிகட்டிப் பறக்கின்ற இசைக்கலைஞர். இசைக்குடும்பத்தில் பிறந்த திருமதி விஜயலக்ஷ்மி சீனிவாசகம் வாய்ப்பாட்டிலும், வயலின் வாசிப்பதிலும் முன்னணியில் நிற்கிறார். இரண்டுமே கைவரப்பெற்ற கலைஞராகத் திகழ்வதால், கலைஞர் வட்டாரம் இவரைச் செல்லமாக TWO IN ONE என்று அழைக்கிறது. தமிழீழத்தின் பிரபலமான கல்லூரிகளில் இசை ஆசிரியராகப் பணியாற்றிய 'விஜி', றொறன்ரோவில் வாழ்ந்த எட்டாண்டு காலத்தில், உயர்ந்த தரத்தில் நடக்கும் இசை, நடன மேடைகளில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார். தமிழீழ எழுச்சிப் பாடல்களை எளிமையான கர்நாடக இசையை அமைத்துத் தானே பாடி ரசிக உள்ளங்களைக் கவர்ந்திழுத்திருக்கிறார். நாட்டிய நாடகங்களுக்கு இசை அமைப்பதில் வல்லவர். இவரின் இசைத் துறைப் பணிக்காக 92 ஆம் ஆண்டு கனடா ஒன்ராறியோ மாகாண அரசு விருது வழங்கிக் கெளரவித்தது. றொறன்ரோ தமிழ் கலைத்தொழில்நுட்பக் கல்லூரி இசைப் பிரிவு பொறுப்பாளரான 'விஜி' வாய்ப்பாட்டிலும், வயலினிலும் பல மாணவர்களை உருவாக்கி வருகிறார்.



## திருமலை பரமேஸின் சங்கீத சாம்ராஜ்யம்



1969 ஆம் ஆண்டு முதலாவது இசைத்தட்டுத் தயாரித்து வெளியிட்ட ஈழத்து மெல்லிசை மன்னர் எம். பி. பரமேஷின் "சங்கீத சாம்ராஜ்யம்" என்ற சி. டி. இம்மாதம் 30 ஆம் திகதி ஜெர்மனி எசன் நகரில் 'தமிழருவி' இசைவிழாவில் வெளியிட்டு வைக்கப்படுகிறது. 'கலைக்காவலர்' சிவனடியான் ஸ்ரீபதி தயாரிப்பில், பரமேஸ், அவர் மனைவி மாலினி, அவர்களது குழந்தைகள் பிரியநந்தினி, பிரபாலினி ஆகியோர் பாடல்கள் பரமேஷ் -பஞ் இணைந்த இசை அமைப்பில் ஒலிக்கின்றன. எம். பி. பரமேஷின் வெள்ளிவிழாவை முன்னிட்டு இந்தப் பதினான்கு பாடல்கள் கொண்ட சி. டி. வெளியிடப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# V&A
## TRAVEL SERVICES

- For your world wide travel
  We arrange low price Travel Tickets
- For Sathia Saibaba Temple Tours &
  South Indian Temple Tours
- We arrange competitive Travel Insurance

**YOU HAVE TRIED THE REST! NOW TRY THE BEST!!**

# V&A
## HOUSING & FINANCIAL SERVICES

**HOME OWNERS:**

- We have Professionals & other tenants waiting to move in
- Your rent will be guaranteed
- We urgently need houses, flats and rooms in
  Tooting, Wimbledon, Colliers Wood, Walthamstow& East Ham

Also,

**PROPERTIES MAINTENANCE WORKS UNDERTAKEN**

CONTACT

140 Hoe Street
Walthamstow, London E17 4QR
Tel: 081- 509 9896 / 081-509 0509
Fax: 081- 509 2812

175 Tooting High Street
London SW17 0SZ
Tel: 081 -767 8090 / 081-767 7060
Fax: 081 -767 9020



படிப்பகம்

www.padippakam.com



# உரிமையோடு சொல்ல ஒருவர்



**உலக நாடகங்களை நன்கு தெரிந்துவைத்துக்கொண்டு உணர்வுபூர்வமான நல்ல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றிவருகின்ற தாசீசியஸ்**

ஈழம் பெருமைப்படக் கூடிய நாடகக் கலைஞர். மண்ணை உயிரென நேசிக்கும் காத்திரமான கருத்துக்களோடு, லண்டனில் வாழ்ந்துகொண்டு, மேற்கத்தைய நாடுகளில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் நம்மவர். தன் மண்ணின் மான உணர்வைச் சிறிது கூட விட்டுக்கொடுக்காது, தனித்துவமான, புதிய வடிவிலான நாடகங்களைத் தயாரித்து வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கின்ற ஈழத்து நாடக அறிஞர்.

உலக நாடகங்களை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு, உணர்வுபூர்வமான நல்ல நாடகங்களை மேடையேற்றுகின்ற தாசீசியஸ் கடந்த பத்து ஆண்டுகளாக லண்டன் பி. பி. ஸி. நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

'மண்ணிலே இருந்து சுரக்கும் கலை இலக்கியங்களோ; மண்ணுக்கு வெளியே எம்மிடையே முகிழ்க்கும் கலை இலக்கிய ஆக்கங்களோ, அவை எல்லாம் இன்றைய தேவையை ஒட்டிய அடிப்படை ஒற்றுமையைக் கொண்டிருக்கவேண்டும்" என்று அடித்துக் கூறும் தாசீசியஸ், நாடகத்துறையில் சிறந்த விற்பன்னர். சிறந்த நடிகர், இயக்குனருக்கான தேசிய விருதுகளை இலங்கையில் பெற்றிருக்கிறார்.

மேற்கத்தைய நாடக நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்தாலும், தான் தயாரித்து மேடையேற்றிய தமிழ் நாடகங்களில் கூத்தையும், நாட்டுப்பாடல்களையும் புகுத்தினார். நாட்டுக் கூத்து, கிராமியக் கூத்து, கோலாட்டம், நாட்டுப்பாடல் போன்ற வடிவம் கொண்ட நாடகத்தைக் கூட சிறிய அரங்கில் மேடையேற்றலாம் என்ற துணிச்சலை 'பொறுத்தது போதும்' என்ற இவரது நாடகம் ஏற்படுத்தியது. நாட்டுப்புறக் கலைகளை நாடகங்களின் மூலம் அனைவரும் பார்க்கிற சந்தர்ப்பத்தை தந்தவர்.

நமது கவிஞர் மகாகவியின் 'கோடை' நாடகத்தின் வெற்றி, தாசீசியஸின் வெற்றி! இந்த நாடகத்தில் தமது பதவியைக் காட்டி, கருத்தை மாற்றப் பார்த்தவர்களுக்கு, மகாகவியின் கருத்துக்களை மாற்ற முடியாது என்று திட்டவட்டமாக கூறியதனால், "பொல்லாப்பு"க்களைத் தேடிக் கொண்ட கசப்பான அனுபவம் இவருக்கு உண்டு.

"புதியதோர் வீடு" நாடகத்துக்காக பரத நாட்டியத்தை சேர்க்க விரும்பி நடன ஆசிரியை ஒருவரை அழைத்து, விளக்கியபோது, நாடகத்தில் பரத நாட்டியத்தைச் சேர்ப்பதை மறுத்துவிட்டார். இதனால் ஏழு ஆண்டுகள் 'கண்டிய நடனம்' பயின்ற வைராக்கியம் தாசீசியஸிடம் உண்டு. இவரது இப்பயிற்சி நாடகங்களில் தாளலயம் இணைய வாய்ப்பு ஆகியது.

இளவாலை சென்ற் ஹென்றீஸ் கல்லூரியில் படித்த இளமைக் காலங்களை தாசீசியஸ் மறக்காமாட்டார். ஆங்கில, தமிழ் நாடக ஆர்வத்தை அக்கல்லூரி தான் வளர்த்தது. கொழும்பு லயனல் வென்ற் அரங்கத்தில் ஆங்கில நாடகங்கள் நடத்தப்பட்ட போது, அவற்றை ஏர்னஸ்ட் மெக்கின்டைர் என்ற நாடக மேதை தயாரித்து வந்தார். அவர் இங்கிலாந்து நாட்டில் மேடையேறும் ஆங்கில நாடகங்களை சமகாலத்தில் இலங்கையிலும் மேடையேற்றினார். அவரிடம் நாடகப் பயிற்சி பெற்றதும் தாசீசியஸின் இன்றைய வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது. அவரது பயிற்சியில் திரை தூக்குவதில் ஆரம்பித்து, நாடக நெறிப்படுத்தல் வரை பக்குவப்படுத்தியது.

லண்டனில் தாசீசியஸின் 'மீண்டும் ராமாயணம், மீண்டும் பாரதம்' வதுலில் பெரும் சாதனை செய்தது. நாட்டுக்கு ஏதோ செய்தோம் என்ற மனத்திருப்தி அவருக்கு.

'களரி' என்ற அமைப்பின் மூலம் லண்டனில் இப்போது தன் பணியைத் தொடரும் தாசீ, தன் குழுவிலுள்ளவர்களுக்கு நாடகப் பயிற்சியோடு பல்வேறு பயிற்சிகளையும் அளித்து வருகிறார். சுவாசப் பயிற்சி, மேடை அசைவுகள், குரல் பயிற்சி, உடலைச் சுருட்டும் பயிற்சி போன்றவை இவற்றில் சில.

கொழும்பில் 1980 ல் நடந்த தேசிய நாடக விழாவில் 14 நாடகங்கள் இறுதிப் போட்டிக்கு வந்தன. தாசீயின் 'பொறுத்தது போதும்' நான்கு பரிசில்களைப் பெற்றன.

சுவிஸ் நாடு தனது எழுநூறு ஆண்டுகள் கடந்து விட்ட நிறைவு விழாவை கொண்டாடியபோது, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு ஆலோசனை வழங்கவும், பயிற்சி அளிக்கவும் நமது தாசீசியஸை தேர்ந்து எடுத்தது. தமிழர் ஒருவர் மேற்கு நாட்டு கலைத்துறைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

பல திறமைகளைத் தன்னுள் நிறைத்து வைத்திருக்கும் தாசீசியஸை 'நம்மவர்' என்று உரிமையோடு சொல்லி எப்பொழுதும் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். ■



படிப்பகம்

www.padippakam.com


# RATNA & CO

## SOLICITORS

# TEL: 081-470 8818

CONTACT: *Mr. M. Ratnapalan & Mrs. K. Ratnapalan*

**OPEN: MON-FRI 9.30-5.30**
**SAT 10.00-1.00**

**168 HIGH STREET NORTH, EASTHAM, LONDON E6 2JA**

**EMERGENCY**

**081-472 0402**

***OTHER LANGUAGES SPOKEN***

***TAMIL - SINHALAM - MALAYALAM - HINDI - URDU - PANJABI***

நினைத்துக் கூடப்பார்க்க முடியாத மலிவுவிலை

# GEETA SAREES

## EXCLUSIVE AND ELEGANT

## WEDDING SAREES
## PRINTED SAREES
## WOOLLEN SHAWLS
## JEWELLERY ETC.

## 231,UPPER TOOTING ROAD,


# LONDON S.W.17

## TEL: 01-672 0208

www.padippakam.com

தமிழில் பேசி,
உங்கள் விருப்பங்களையும்
தேவைகளையும் கேட்டறிந்து
உலக நாடுகளுக்கு எல்லாம்
பறந்து சென்று வர
தமிழர்களால் நடாத்தப்படும்
உங்கள் நிறுவனம்
இன்றே நாடுங்கள்

# TRANSGLOBE



**328 HIGH ROAD, WILLESDEN, LONDON NW10**

**TEL: 081-451 3566**

**நம்பிக்கை! நாணயம்! குறைந்த விலை!**

படிப்பகம்

www.padippakam.com



# இம்மாத பலன்

செப்டம்பர் 1995

## மேடம்

குடும்ப சூழ்நிலைமை சாதாரணமாகவே இருந்து வரும். பொருளாதாரம் சீராகவே காணும். கொடுக்கல் வாங்கலில் சிரமம் தெரியும். தொழில்துறையில் திருப்தியான போக்கு காணப்பட்டாலும் கடுமையான செலவுகளும் இருக்கவே செய்யும். கணவன் -மனைவி உறவு சாதாரணமாக இருந்து வரும். உடன்பிறந்தவர்களுடன் சிறுபிரச்னைகளும், மன பேதங்களும் இருக்கும். சுப காரிய நிகழ்ச்சிகளுக்கும் இடம் உண்டு. பூர்வீக சொத்துக்களை சிலர் அடமானம் வைப்பதோ விற்பனை செய்வதோ இடம் பெறும். சில முக்கிய கடன்வகைகளை தீர்க்க வேண்டிவரும். போட்டி பந்தயங்களில் சிறு ஆதாயம் எதிர்பார்க்கலாம்.

## இடபம்

குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சிகரமாகவே இருந்து வரும். பொருளாதாரத்தில் தாராள போக்கு காணும். கொடுக்கல் வாங்கலில் மிதமான சூழ்நிலை இருந்து வரும். கணவன் -மனைவி உறவு சீராகவே இருந்து வரும். தொழில் துறை சம்பந்தமாக ஏற்பட்ட இடையூறுகள் அகன்று விடும். அயல்நாட்டு எதிர்பார்ப்புகள் அனுகூலமாக இருக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் பெரியதொரு வருமானம் கிடைக்க வழிஏற்படும். உடன்பிறந்தவர்களிடம் சீரான உறவை காண முடியாது. உடல் நல பாதிப்பும், மருத்துவச் செலவுகளுக்கும் இடம் உண்டு. போட்டி பந்தயங்களில் ஆதாயம் இருக்காது.

## மிதுனம்

குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சியாகவே இருக்கும். பொருளாதாரத்தில் தாராளப் போக்கு காணப்படும். கொடுக்கல் வாங்கலில் சரளமான போக்கு இருக்கும். தொழில்துறையில் மற்றவர்களின் நம்பிக்கையும், நாணயமும் இருப்பதால் பிரச்சினைகள் ஏதும் இன்றி செயல்பட முடியும். பெரிய ஒப்பந்தங்களுக்கும் வழிஏற்படும். தொழில்பிரமுகர்களின் சந்திப்பும், பிரயாணமும் அனுகூலமாகும். பெரியதொரு பணவரவுக்கும் வாய்ப்பு உள்ளது. சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கும் இடம் உண்டு. குடும்பத் தேவைகளையும் சமயத்துக்கு தகுந்தபடி பூர்த்தி செய்துகொள்ள முடியும். வழக்குகள் ஏதேனும் இருப்பின் ஒருமுடிவுக்கு வராமல் இழுபறிநிலைமையே காணப்படும். போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் உண்டு.

## கடகம்

தமிழகத்திலிருந்து
வி.ஸ்ரீநிவாசன்

குடும்ப சூழ்நிலை சந்தோஷமாகவே இருந்து வரும். பொருளாதாரத்தில் தாராள போக்கு காணப்படும். கொடுக்கல் வாங்கலில் சரளமான சூழ்நிலை இருக்கும். கணவன் -மனைவி உறவு சந்தோஷமாக இருந்துவரும். தொழில்துறையில் அரிய சாதனையை புரிந்திடக் கூடும். தொழில் வழியில் அரசாங்க, அரசியல் பிரமுகர்களின் இதமான போக்கு அனுகூலத்தைத் தரும். சொத்துசம்பந்தமாக இருந்துவரும் வழக்கு விவகாரங்களையும், சிக்கல்களையும் எளிதில் சமாளித்துவிடலாம். புதிய வாகனம் வாங்குதல் அல்லது மாற்றுதல், ஆகியவைகளும் இடம் பெறும். சுபகாரிய நிகழ்ச்சிகளை இனிதே முடித்துவிடலாம். இதற்காக கடன்களும் ஏற்படவே செய்யும்.

## சிங்கம்

குடும்ப சூழ்நிலை சாதாரணமாகவே இருந்துவரும். பொருளாதாரத்தில் சற்று கடினமான சூழ்நிலை தோன்றும். கொடுக்கல் வாங்கலில் மாமூலான நிலைமையே இருக்கும். கணவன் -மனைவி உறவு சாதாரணமாகவே இருக்கும். தொழில் துறையில் கடின போக்கும் முட்டுக்கட்டை நிலைமையும் தோன்றும். வீணான அலைச்சல்களும் இருக்கவே செய்யும். பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் குடும்பத்தையும் தொழிலையும் கவனிக்க முடியாமல் அல்லல்பட நேரிடும். தடைப்பட்டிருந்த சில காரியங்களை இப்போது முடித்திடலாம். தொழில் துறையில் பெரியதிட்டங்கள் தீட்டி அவைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதில் தடைகளுக்கு வழிஉண்டு. சொத்துக்கள் விற்பனையோ அல்லது அடமானமோ வைப்பதோ சாத்தியமாகும். போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் இருக்கும்.

## கன்னி

குடும்ப சூழ்நிலை சாதாரணமாகவே இருக்கும். பொருளாதாரத்தில் சற்று கடினமான போக்கு இருந்துவரும். கொடுக்கல் வாங்கலில் சிரமம் இருந்து வரும். கணவன் -மனைவி உறவு சுமுகமாகவே காணும். தொழில்துறையில் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் தென்படும். எதிர்பார்க்கும் சில காரியங்களில் ஏமாற்றமே ஏற்படும். தாய்வழியில் மருத்துவச் செலவுகளுக்கும் இடம் உண்டு. ஆடம்பரச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. இயந்திர வாகனத் தொழில்களில் சிக்கல்களும் செலவுகளும் இடம்பெறும். வழக்கு விவகாரங்களும் தோன்றும். போட்டி பந்தயங்களில் சுமாரான ஆதாயம் உண்டு.

## துலாம்

குடும்ப சூழ்நிலைமை மகிழ்ச்சியாகவே இருக்கும். பொருளாதாரம் சரளமாகவே இருந்து வரும். கொடுக்கல் வாங்கல்களில் தாரா



படிப்பகம்

www.padippakam.com


ளத்தை காணமுடியும். கணவன் - மனைவி உறவு சுமுகமாகவே இருக்கும். தொழில்துறையில் அவசரமுதலீடு தேவைப்படும். அதற்காக சில பொருட்களை விற்பனை செய்வதோ அடமானம் வைப்பதோ செய்தாக வேண்டும். கூட்டாளிகளையும் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படும். அரசாங்கம் மூலம் பணம் கிடைக்கவும் வழி உண்டு. சுப காரிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இயந்திரம், வாகனம் வாங்குவதற்கு சிலருக்கு வாய்ப்பு அளிக்கும். போட்டி பந்தயங்களில் ஆதாயத்தை காணலாம்.

## விருச்சிகம்

குடும்ப சூழ்நிலையில் சந்தோஷத்தை காணலாம். பொருளாதாரத்தில் தாராளத்தை காணமுடியும். கொடுக்கல் வாங்கலில் சரளமான சூழ்நிலை இருக்கும். கணவன் -மனைவி உறவு சந்தோஷமாக இருக்கும். தொழில் துறையில் புதியதொரு வேகமும், விஸ்தரிப்பையும் காணமுடியும். அரசாங்க ஒத்துழைப்பும் இருக்கும். இடம்மாற்றத்துக்கும் வழி உண்டு. சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கும் வாய்ப்பு உண்டு. கடன்கள் பாதிப்பு கொடுக்காது. அயல் நாட்டு தொடர்பும், தன வரவும் கிடைத்திட வாய்ப்புகிட்டும். வழக்குகளில் வெற்றி காணும். போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் இருக்கும்.

## தனுசு

குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இருக்கும். பொருளாதாரத்தில் சரளமான போக்கு இருக்கும். கொடுக்கல் வாங்கலில் தாராளத்தை காணலாம். கணவன் - மனைவி உறவு சந்தோஷமாகவே இருக்கும். தொழில் துறையில் வேகம் அதிகரித்து வருவதைகாண முடியும். உபதொழில் செய்பவர்களுக்கு கணிசமான ஆதாயம் கிட்டிடும். புதிய கட்டிடம் அமைத்தல், வீடுகட்டுவது போன்றவைகளும் இடம்பெறும். நண்பர்களின் ஒத்துழைப்பும் அனுகூலமாகவே இருந்திடும். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கும் வாய்ப்பு உண்டு. வழக்குகள், கடன்கள் பற்றி கவலை ஏதும் இல்லை. போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் கிடைத்து வரும்.

## மகரம்

குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சியாகவே இருந்துவரும். பொருளாதாரத்தில் சரளமான போக்கு காணும். கொடுக்கல் வாங்கலில் தாராளத்தைக் காணலாம். கணவன் - மனைவி உறவில் சந்தோஷத்தை காணமுடியும். தொழில் துறையில் புதிய மனிதர்களின் ஒத்துழைப்புடன் நல்லமுன்னேற்றத்துக்கும் வாய்ப்பு கூடும். அரசாங்க மனிதர்களின் ஒத்துழைப்பும் தொழிலுக்கு உறுதுணையாக அமைந்து வருகிறது. சிலருக்கு திடீரென திருமணம் செய்ய வாய்ப்புகிட்டும். பூர்வீக சொத்து சம்பந்தமாக இருந்து வந்த வழக்கு ஒரு முடிவுக்கு வந்துவிடும். கடன்கள் பற்றி கவலை ஏதும் இருக்காது. போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் எதிர்பார்க்கலாம்.

## கும்பம்

குடும்ப சூழ்நிலை சாதாரணமாக இருந்து வரும். பொருளாதாரத்தில் எவ்வளவுதான் வரவு வந்தாலும் அதற்கு தகுந்தபடி செலவுகளும் கடுமையாகவே இருக்கத்தான் செய்யும். கொடுக்கல் வாங்கல்களில் சிரமமான சூழ்நிலை இருந்து வரும். கணவன் -மனைவி உறவு சாதாரணமாகவே இருக்கும். தொழில் துறையில் சற்று கடின போக்கு இருந்துவரும். குடும்பத்திலும் முணுமுணுப்புகளுக்கு குறைவு இருக்காது. சுபகாரிய நிகழ்ச்சிகளை முடித்துவைப்பதில் கால தாமதங்கள் ஏற்படும். நண்பர்களின் ஒத்துழைப்பு மிகவும் அனுகூலமாகவே இருந்துவரும். கடன்கள் பற்றி கவலைப்பட ஏதும் இல்லை. போட்டி பந்தயங்களில் ஓரளவு ஆதாயம் இருக்கும்.

## மீனம்

குடும்ப சூழ்நிலை சாதாரணமாகவே இருந்து வரும். பொருளாதாரத்தில் சிரமமான போக்கு காணும். கொடுக்கல் வாங்கல்களில் முட்டுக்கட்டை நிலைமை தோன்றும். கணவன் -மனைவி உறவு சுமாராகவே இருந்துவரும். தொழில்துறையில் ஒருவித சுறுசுறுப்பு அற்ற தன்மை இருக்கும். இருந்த போதிலும் எடுக்கும் முயற்சிகள்யாவும் வெற்றியே காணும். அரசியல் ஈடுபாடுகள் அனுகூலமாகவே இருந்துவரும். செய்தொழிலில் சற்று முட்டுக்கட்டை நிலைமையே தோன்றும். குடும்பத் தேவைகளையும் சரியாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமை காணும். கடன்கள், வழக்குகள் இருந்தாலும் பாதிப்பு கொடுக்காது. போட்டி பந்தயங்களில் ஆதாயம் இருக்காது.

YOGA & CO
For all your legal work
and conveyancing
Solicitors & Administrators of Oaths
47 Booth Road, Colindale,
London NW9 5JS
Telephone: 081-205 0899



படிப்பகம்

www.padippakam.com


# மற்றவர்களுக்கு புரியக்கூடாது!

தமிழ் இலக்கிய உலகில் விமர்சனத்துறையில் அனைத்துத் தரப்பினராலும் பேசப்படுபவர்கள் பேராசிரியர் சிவத்தம்பியும், பேராசிரியர் கைலாசபதியும்.

இவர்களில் இரண்டாமவரை தமிழிலக்கிய உலகு இழந்து இன்று பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் அவர் இன்றும் பேசப்படுகிறார்.

இந்த இருவரும் தமிழிலக்கிய உலகுக்கு பாரிய பங்களிப்பைச் செய்தவர்கள். ஆனாலும் இந்த இருவரையும் பற்றி விமர்சிக்கும் மேதாவிகளும் நம்மத்தியில் இல்லாமல் இல்லை. அதைப்பற்றியல்ல நான் இங்கே எழுதவிருப்பது.

சிவத்தம்பியின் எழுத்துக்கள் சாதாரண வாசகர்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாதவை, ஆனால் கைலாசபதியின் எழுத்துக்கள் அப்படியல்ல.

கைலாசபதி சில காலம் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

தங்கள் மேதாவித் தனங்களை தங்கள் படைப்புக்களில் காட்டவேண்டும், அதனைப் படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் தாங்கள் மேதாவிகள் என்பது தெரியவேண்டும் என்று எழுதினால் அதனை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது.

பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் மாணவர்கள் மத்தியில் ஆற்றவேண்டிய உரையை கிராமத்து வாணிவிழாவில் பேசுவதில் அர்த்தம் இருக்காது.

சாதாரண வாசகர்களுக்கு புரியாதவாறு எழுதுவது, அல்லது எல்லோராலும் புரிந்துகொள்ள முடியாதவாறு பேசுவது இப்போது புலம்பெயர்ந்த நம்மவர்கள் மத்தியில் ஒரு தொற்றுநோய்போல பரவி வருகிறது.

> **'மனிதனை, முதலில் மனிதனாக மதிக்கத் தெரியாதவர்கள், தாயக மண்ணை நேசிக்கத் தெரியாதவர்கள்- கலைஞர்கள் என்றும் புத்திஜீவிகள் என்றும் கூறிக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது'**

அப்படிப் பேசினாலோ அல்லது எழுதினாலோ தன்னை சமுதாயத்தில் ஒரு வித்தியாசமானவராக காட்டிக்கொள்ளலாம் என்பது இவர்களது எண்ணமாக இருக்கவேண்டும்.

'அது என்ன சாதாரண வாசகர்கள் என்று வாசகர்களை குறைத்து மதிப்பிடுகிறீர்கள். வாசகர்களின் ரசனையையும், ஆற்றலையும் குறைத்து மதிப்பிடுவதா' என்று சிலர் வாதாடுவதும் உண்டு.

பாடசாலையில் படிப்பவர் எல்லோரும் டாக்டராகிவிட முடியாது. ஒருவர் டாக்டராகலாம். இன்னொருவர் வேறொரு துறையில் சிறப்படையலாம்.

ஆனால் இருவரும் கெட்டிக்காரர்கள்தான்.

புத்தி என்பது எல்லோருக்கும் உண்டு. அதில் டாக்டராகவோ அல்லது என்ஜினியராகவோ இருப்பவர்தான் புத்தியுள்ளவர் என்று அர்த்தமல்ல. இப்படி வர முடியாவிட்டால் கிடைக்கின்ற நூல்களையெல்லாம் படித்துவிட்டு அவற்றிலிருந்து கிடைத்த தரவுகளை வைத்துக்கொண்டு, பேசித்திரிவதன் மூலமும், எழுதுவதன் மூலமும் தங்களை புத்திஜீவிகள் என்று 'வட்டம்' அமைத்துக்கொள்வதையும் புலம்பெயர்வாழ்வில் அவதானிக்கலாம்.

இதனை எழுதிக்கொண்டிருந்தபோது என் நண்பர் ஒருவர் மேசைக்கு முன்னால் வந்து அமர்ந்துகொண்டார்.

உடனே எங்கள் பேச்சும், இந்த விடயம் தொடர்பாகவே தொடங்கிவிட்டது.

"இந்த வியாதி சில கலைஞர்களுக்கும் தொற்றிக்கொண்டுவிட்டது" என்றார் அவர்.

'பாரிஸ் வந்திருந்த ஒரு கலைஞரை வீட்டுக்கு அழைத்திருந்தேன். நண்பர், கலை நிகழ்ச்சிக்காக வந்தவர், ஹோட்டலில் சாப்பிட்டால் அவருக்கு செலவு அதிகமாகி விடும் என்பதால் ஒரு மனிதாபிமானத்துக்காக எனது வீட்டிலேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால் தாம் ஒரு பெரிய கலைஞர் என்பதால் தங்களை அழைத்து சாப்பாடு தருவதை நான் பெருமையாகக் கருதித்தான் சாப்பாடு போடுவதாக நினைத்துக்கொண்டதை அவதானிக்க முடிந்தது' வந்த நண்பர் தொடர்ந்துகொண்டேயிருந்தார்.

நான் கதைத்த கதைக்கும் இதற்கும் என்ன தொடர்பு-ஏன் இப்படி 'அறுக்கிறான்' இவன் என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

ஆனால் அவன் தொடர்ந்த விடயங்கள் அது 'அறுவை' அல்ல என்பதை உணர்த்தியது.

'இந்தியக் கலைஞர்கள் வந்தால் அவர்களை அழைத்து சாப்பாடு கொடுப்பதை பெருமையாக நம்மவர்கள் கருதுவது போலத்தான் தங்களுக்கு விருந்து கொடுப்பதையும் அவர்கள் நினைத்துவிட்டார்கள், அந்தக் கலைஞரோ, எனக்கொரு துர்சு...' அவனுக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிட்டதை உணர முடிந்தது.

' மனிதனை, முதலில் மனிதனாக மதிக்கத் தெரியாதவர்கள் , தாயக மண்ணை நேசிக்கத் தெரியாதவர்கள் கலைஞர்கள் என்றும், புத்திஜீவிகள் என்றும் கூறிக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது' என்றான் அவன்.

அவனது கேள்வியிலும் அர்த்தம் இருப்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

**- குகநாதன் -**



படிப்பகம்

www.padippakam.com


# குமார்ஸ்

உங்கள் தேவை அறிந்து... எங்கள் சேவை...

# KUMARS

நங்கையர் விரும்பும் நவநாகரிக நகைகள்
சிறுவர், சிறுமியர்க்கான ஆடைகள்
விடியோ, ஓடியோ கசெட்டுகள்

**KUMARS SHOP**
80, Bld. Barbes
75018 Paris
Mo: Marcadet Poissonniers
Tel: 42 59 11 52
Fax: 42 59 35 00

**KUMARS TRADE CENTRE**
193, Rue du Fg. St. Denis
75010 Paris
Mo: Gare du Nord /
La Chapelle
Tel: 42 05 41 36

**KUMARS JEWELS**
80, Bld. Barbes
75018 Paris
Mo: Marcadet Poissonniers
Tel: 42 59 11 52
Fax: 42 59 35 00

**K.T.C.JEWELS**
193, Rue du Fg. St. Denis
75010 Paris
Mo: Gare du Nord /
La Chapelle
Tel: 42 05 41 36


படிப்பகம்

www.padippakam.com

# லண்டனில் தங்க நகைகளின் சுரங்கம் முல்ஜிஸ்

# Mulji's

**SPECIALIST IN 22CT GOLD HALLMARKED JEWELLERY AND EXCLUSIVE DIAMOND JEWELLERY**



உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தாலிக்கொடி
வைரக்கல் தோடு
அட்டியல், பதக்கம்
சங்கிலி, மெட்டி
மோதிரம்

*Fascinating Beauty*
*Plus real value*
*Gift Some*
*Golden memories*

# MULJI'S

**216-218 UPPER TOOTING ROAD, LONDON SW17 7EW**
**TEL: 0181-767 8818**

படிப்பகம்